Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month


# குடும்ப ஆசீர்வாத ஜெபம்

**சேலத்தில்**

மே 7 சனிக்கிழமை

மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

இடம்: MVR மஹால், (Old KMP)
அரசு மருத்துவமனை மற்றும்
பெரியார் மேம்பாலம் அருகில்,
ஓமலூர் ரோடு, சேலம்.

**கோயம்புத்தூரில்**

மே 8 ஞாயிற்றுக்கிழமை

மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

இடம்: TELC சபா மண்டபம்
மணிக்கூண்டு அருகில்,
டவுன் ஹால்
கோயம்புத்தூர்



தேவ செய்தியாளர் Dr.ஆனந்த ஸ்திரா

தொடர்புக்கு: அன்பரின் ஊழியம் (0431) 2765386 செல் ; 94888 45627

**திருநெல்வேலியில்**

மே 14 சனிக்கிழமை

இடம்: செல்வி மஹால்,
(காளிமார்க் பேருந்து நிறுத்தம் அருகில்)
முருகன் குறிச்சி,
பாளையங்கோட்டை.

நேரம்: காலை 9.30 மணி முதல் 2.00 மணி வரை
(செல்: 94889 08328)

**மதுரையில்**

மே 15 ஞாயிற்றுக்கிழமை

இடம்:
அமெரிக்கன் கல்லூரி ஆடிட்டோரியம்,
அமெரிக்கன் கல்லூரி வளாகம்,
தல்லாகுளம், மதுரை

நேரம்: மாலை 5 மணி முதல்
இரவு 8 மணி வரை
(செல்: 94425 55836)



தேவ செய்தியாளர்கள் :
Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா


Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:8 இதழ்:5 மே 2022 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL:8 ISSUE NO : 5 May 2022 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-

## நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்

எண்ணாகமம் 13:30





**இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்! அவர் மிகுந்த மனதுருக்கமும், வல்லமையும் உடையவர்! தமது ஊழியக்காரரின் ஜெபத்தைக் கேட்டு இன்றும் மகத்துவமான காரியங்களைக் கர்த்தர் செய்கிறார்!**

## அறுவை சிகிச்சையின்றி அற்புத சுகம் தந்த தேவன்!

எங்கள் பேரனின் பெயர் ஜெஸ்வின் ஜோஸப். மூன்றரை வயதாகிறது. ஒரு மாதத்திற்கு முன் திடீரென வயிற்று வலியும், வாந்தியும் ஏற்பட்டது. உடனே மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். மருந்தும், மாத்திரையும் தந்தார்கள். அதை சாப்பிட்டும் ஒன்றும் சரியாகவில்லை. அன்று இரவு மீண்டும் மருத்துவமனையில் அனுமதித்தோம். மூன்று நாட்களாகியும் வயிற்று வலி குறையவில்லை. எனவே ஸ்கேன் எடுக்க வேண்டும் என்றார்கள். ஸ்கேன் செய்து பார்த்தபோது இரண்டு குடலும் இணைந்து இருப்பதாகவும், அதை இரண்டு விதமான முறையில் சரி செய்யலாம் என்றும் அதில் சரியாகவில்லை என்றால் அறுவை சிகிச்சை செய்துதான் சரிசெய்ய முடியும் என்றார்கள். அதுவரையில் உணவு எதுவும் கொடுக்க கூடாது என்றார்கள். மிகுந்த வேதனையோடு இரவு 2.30 மணிக்கு தேவ ஊழியர் Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களின் ஜெபமையத்தை தொடர்புகொண்டோம். அங்கிருந்தவர் **"கவலைப் படாதீர்கள்! குழந்தைக்கு ஒரு பிரச்சனையும் வராது, ஜெபிக்கிறோம். கர்த்தர் தாமே குணப்படுத்துவார்"** என்று நம்பிக்கை யூட்டினார்கள். மாலை 5 மணிக்கு டாக்டர் இன்னும் ஒரு ஸ்கேன் எடுக்க கூறினார். ஸ்கேன் எடுத்து பார்த்ததில் இணைந்திருந்த குடல் தானாகவே விலகி சரியான இயல்பு நிலையில் இருந்தது. டாக்டர் பார்த்துவிட்டு எல்லாம் சரியாகிவிட்டது என்றார்கள். அதிலிருந்து வயிற்றுவலியும், வாந்தியும் நின்றது. அற்புதத்தை செய்த தேவாதி தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்! எங்கள் பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகின்றோம்.



சகோதரி.
பீட்டர் பிலோமி
அவர்களின்
பேரக்குழந்தை
ஜெஸ்வின் ஜோஸப்

- Sis. **பீட்டர் பிலோமி, மணவாளகுறிச்சி, கன்னியாகுமரி**



**திருச்சி அன்பரின் ஊழிய ஜெபஸ்தலத்தின் விடுபட்ட, மீதமுள்ள பணிகள் மற்றும் புதுப்பிக்கும் பணிகள் (Renovation) நடைபெற்று வருகிறது.**

**ANBARIN OOZHIYAM**
**A/C NO. 10848559426**
**State Bank Of India**
**Cantonment**
**Trichy Main Branch**
**IFS code:**
**SBIN 0000930**

**தேவனுடைய ஜெபஸ்தல ஆலய புதுப்பிக்கும் பணிக்கு உங்களுடைய உதாரத்துவமான காணிக்கையை அனுப்பி உதவி செய்யுங்கள்.**

**கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் ஆசீர்வதிப்பார்.**



## PRAISING TIME

நமது

YouTube MINISTRY OF JESUS

சேனலில் கண்டு

தேவ ஆசீர்வாதம் பெறுங்கள்

# அன்பரின் ஊழியம்

**மலர் 8 ✣ மே 2022 ✣ இதழ் 5**




## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அருமையான பங்காளர்களுக்கும், இனிய வாசகர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாதத்தில் உங்களுடைய பிள்ளைகள் அல்லது பேரப்பிள்ளைகள் தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருப்பார்கள். கர்த்தர் தாமே அவர்களை நல்ல சுகத்துடன் பாதுகாக்கவும், தேர்வு நன்கு எழுத தேவையான ஞானத்தையும், விசேஷித்த கிருபை களையும் கொடுக்கவும் நாங்கள் குடும்பமாக ஜெபிக்கிறோம்.

உங்கள் பிள்ளைகளுடைய தேர்வு எண், போட்டோவை வாட்ஸ்அப் வாயிலாகவோ அல்லது தபாலிலோ அனுப்பி வையுங்கள். பிள்ளைகள் எவ்வளவு படிப்பில் சிறந்து விளங்கினாலும், அவர்கள் கர்த்தருக்குள் நெருங்கி ஜீவிக்க வேண்டும் என்பதே நம்முடைய விருப்பமாய் இருக்க வேண்டும்.

தானியேல் உலக காரியங்களை வெறுத்து தன்னை காத்துக் கொண்டதினால், கர்த்தர் அவனுக்கு விசேஷித்த ஞானத்தை தந்தார். அதேப்போல நம் பிள்ளைகளும் உலகத்தின் காரியங்களை வெறுத்து, கர்த்தரை தெரிந்துக்கொள்ள ஊக்கமாய் நாமும் ஜெபிப்போம். பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடப்போம்.

ஏப்ரல் மாதம் வேலூர், நாகர்கோவில், சென்னை, விஜயவாடா, செகந்திராபாத் மற்றும் திருச்சியில் நடைபெற்ற கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார். ஏராளமான பங்காளர்கள் மற்றும் புதிதாக வந்திருந்த மக்கள் தேவ ஆசீர்வாதங்களைப் பெற்று சமாதானத்துடன் சென்றார்கள். தொடர்ந்து இத்தகைய சுவிசேஷ கூட்டங்கள் நடைபெற கருத்தாய் ஜெபியுங்கள். உங்கள் பகுதிகளில் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று விரும்புகிறவர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். ஏனென்றால் சுவிசேஷம் இன்னும் துரிதமாக செல்ல

- ✯ தானியேல் ....... தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு,
- ✯ ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான். (தானி. 1:8,20)


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

**சந்தா விபரம்**

இந்தியா : **ஆண்டு சந்தா ரூ.200/-. ஆயுள் சந்தா ரூ.2,000/-.**

வெளிநாடு : **ஆண்டு சந்தா ரூ.1,500/-. ஆயுள் சந்தா ரூ.15,000/-.**



அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

வேண்டும். சென்னையில் நடைபெற்ற அப்போஸ்தல தீர்க்கதரிசன பயிற்சி முகாமைப்பற்றிய விபரங்களை உள் பக்கத்தில் பார்க்கலாம்.

**அன்பரின் ஊழியம் பத்திரிக்கை சந்தாவை இதுவரை புதுப்பிக்காதவர்கள், விரைவில் புதுப்பித்துக் கொண்டு, ஊழியத்தை தாங்குங்கள். ஊழியத்தை தாங்குவதன் மூலம் எங்களோடு இணைந்து ஆத்தும ஆதாயம் செய்கிறீர்கள். உங்கள் பலன் பரலோகத்தில் மிகுதியாய் இருக்கும்.**

அன்பரின் ஊழிய ஜெபஸ்தல பராமரிப்பு வேலைகள் அனைத்தும் கர்த்தரின் ஒத்தாசையால் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த பராமரிப்பு வேலைக்குரிய பணத்தேவைகள் அதிகமாய் இருக்கிறது. கர்த்தர் வாசம் செய்கிற ஆலயத்தின் தேவைகளை நீங்கள் உற்சாகமாய், ஒரு பொருத்தனை யோடு தாங்கும்பொழுது கர்த்தர் உங்கள் குடும்பத்தை ஆசீர்வதிப்பார். உங்களை இன்னும் மேன்மைப் படுத்துவார்.

நம்முடைய சமூக ஊடகங்கள் (Ministry of Jesus) வழியாக வருகின்ற தேவ செய்திகளை உங்களுக்கு தெரிந்தவர்களுக்கு share செய்யுங்கள். அந்த நேரத்தில் **நீங்கள் எடுக்கிற சிறு முயற்சி சத்தியம் மேன்மேலும் பரவ உதவியாயிருக்கும். குறிப்பாக உங்கள் வாலிப பிள்ளைகளுக்கு நமது சமூக ஊடகங்கள் வாயிலாக வருகிற தேவ செய்திகள் மற்றும் ஆராதனை நிகழ்ச்சிகளை பார்க்கும்படி உடனிருந்து அறிவுறுத்துங்கள்.**

ஏப்ரல் மாதமும் S.J.Saves Trust மூலமாக விதவைப்பெண்களுக்கு பல உதவிகளை செய்தோம். இந்த பணியில் எங்களோடு இணைந்து தாங்கி வருகிற உங்களை கர்த்தர் மறக்கமாட்டார். அதற்குரிய பலனை உங்களுக்கும், உங்கள் சந்ததிக்கும் நிறைவாய் தந்து ஆசீர்வதிப்பார்.

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் அல்லது நண்பர்கள் யாரேனும் படிப்பை முடித்துவிட்டு வேலைக்காக காத்திருக்கிறார்கள் என்றால் உடனே எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். அன்பரின் ஊழியத்தின் வேலை வாய்ப்பு பற்றிய விபரங்கள் அனைத்தும் உள்பக்கத்தில் தெளிவாக இருக்கின்றன. தவறாமல் பாருங்கள்.

**திருச்சி அன்பரின் ஊழிய ஜெபஸ்தலத்தில் கடைசி சனிக்கிழமையன்று அற்புத குடும்ப ஆசீர்வாத ஜெபம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த கூட்டத்தில் நாங்கள் குடும்பமாக வந்திருந்து, உங்களை தனித்தனியே சந்தித்து ஜெபிப்போம். உங்களில் அநேகர் எங்களை நேரில் பார்க்க விரும்புகிறீர்கள். ஆகவே ஜெபம் நடை பெறுகின்ற இந்த நாட்களை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.**

கிறிஸ்துவுக்காக பாடுபடுகிறவர்களை அனுதினமும் நம்முடைய ஜெபத்தில் மறவாமல் தாங்குவோம். விசேஷமாக எங்கள் அப்பா, அம்மா இருவரின் நல்ல சுகத்திற்காகவும், எங்களுக்காகவும், ஊழியத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். எங்களை தனியே சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள் இந்த எண்ணிற்கு தொடர்பு கொண்டு **செல் 94888 45627** முன்அனுமதி பெற்று வாருங்கள்.

கர்த்தருடைய கிருபையும், வாக்குமாறாத அன்பும் உங்களோடும், உங்கள் குடும்பத்தினரோடும் இருந்து தொடர்ந்து வழிநடத்துவதாக!

கிறிஸ்துவின் பணியில்
Dr. **ஜேன் ஜாஷ்வா**

## இம்மாத வாக்குத்தத்தம்

**சங்கீதம் 86:10**
**மத்தேயு 28:20**
**1பேதுரு 3:18**
**எபேசியர் 2:5**

## இதயம் தொட்ட எண்ணம்

தேவனை தெரிந்துக் கொள்ளுங்கள்! – உலகம் உங்கள் முன் தாழ்த்தப்படும்.
உலகத்தை தெரிந்துக் கொள்ளுங்கள் – நீங்கள் உலகத்தில் தாழ்த்தப்படுவீர்கள்.

**Choose the Lord the world will be humbled before you**
**Choose the World You will be humbled in the world**

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

State Bank of India, Cantonment, Trichy Main Branch
IFS Code : SBIN 0000930

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.




தேன் துளிகள் குறுஞ்செய்தி Whatsapp No. 95975 55066

## கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவரிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**கன்னியாகுமரி : 82203 17472**
**சென்னை : 77081 53666**



# நேர்மறையான சிந்தனை
# Positive Thinking

**தேவ செய்தி : Rev.Dr. A. ஜாஷ்வா**

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பரின் ஊழிய வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள்!

**உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. (வெளி.1:5)**

சென்ற மாதங்கள் முழுவதும் நம்மை கண்மணியைப் போல பாதுகாத்த தேவன் தாமே இந்த புதிய மாதத்தை காணச் செய்ததற்காக அவரை துதிப்போம். இந்த மாதத்திற்கான செய்தியின் மூலமாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த நாட்களில் உங்களுக்கு ஏற்பட்ட பலவிதமான கஷ்டங்களினிமித்தம் நீங்கள் சோர்ந்துபோய் மேற்கொண்டு என்ன செய்வது எனத் தெரியாமல் இருக்கலாம். ஒருவித கலக்கத்துடன் எல்லாம் முடிந்தது என இருந்தாலும் சகலத்தையும் புதிதாக்குகிற நம் தேவனின் கிருபை, இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பிக்கிற வல்லமை இந்த செய்தியின் வழியாக உங்களை பெலப்படுத்தும் என நம்புகிறேன்.

இன்றைக்கு அநேக இக்கட்டான சூழ்நிலைகளில் நமக்கு நேர்மறையான சிந்தனைக்கு பதிலாக எதிர்மறையான சிந்தனைகளே வருவது இயல்பு. இது என்னால் செய்ய முடியுமா? இந்த வியாதி எனக்கு நீங்குமா? என்னால் படிக்க முடியுமா? நான் விரும்புகிற வேலை எனக்கு கிடைக்குமா? இப்படி எல்லாம் யோசிப்பது எதிாமறையான ஒரு காரியமாகும்.

எனக்கு வேலை கிடைக்கும்! என் வியாதி சுகமாகும்! என் வாழ்க்கையில் நான் விரும்பின படிப்பை படித்து நான் உயர்வேன். இது நேர் மறையான சிந்தனைகளாகும். நேர்மறை, எதிர்மறை சிந்தனை இந்த இரண்டுக்கும் வித்தியாசம் உள்ளது. இந்த நேர்மறை சிந்தனைக்கு இன்னொரு வார்த்தை Optimistic Attitude என்பதாகும். அதாவது **எந்த சூழ்நிலையிலும் நம்முடைய குறிக்கோள் நல்ல காரியத்தை நோக்கி இருப்பது தான் நேர்மறை சிந்தனையாகும்.** இந்த சிந்தனையில் நல்லதல்லாத காரியங்கள் நிச்சயமாக இருக்காது. ஒருவேளை நம்பிக்கையில்லாத ஒரு சூழ்நிலையாக இருக்கலாம் அல்லது ஒரு பெரிய இழப்பாக, ஒருவித பயமாக இருக்கலாம். சாத்தியமே இல்லாத தனித்துவிடப்பட்ட ஒரு சூழ்நிலையாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் சரி உங்களுடைய மனது நல்ல காரியத்தையே நோக்கி இருக்கும்பொழுது அது நேர்மறையான சிந்தனையாக உருவாகிறது.

வரலாற்றிலே சிவாஜியினுடைய தாயார் அவரது சிறு வயதிலேயே வீரர்களுடைய கதைகள், வீரத்தை பற்றிய கதைகளை சொல்லி சிவாஜிக்கு நேர்மறை சிந்தனையை கற்றுக்கொடுத்துள்ளார்கள். பின்னாளில் சிவாஜி ஒரு பெரிய மராட்டிய வீரராக திகழ்ந்தார் என்பதை அறிவோம்.

ஜான்ஸிராணி லட்சுமி பாய் என்ற விர மங்கையை குறித்து படிக்கும் பொழுது, அவர்களுடைய பாட்டி அவருக்கு ஆகாரம் ஊட்டி விடும் பொழுதெல்லாம், வீரர்களை பற்றியும், வீர உணர்வுகளை பற்றியும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நேர்மறை சிந்தனையே இவரை பின்னாளில் வீர மங்கையாக மாற்றியது.

இன்றைக்கு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை **"நீ எங்கே உருப்பட போகிறாய்"** என்று அவர்களே எதிர்மறையாக சொல்லும் பொழுது அது அப்படியே ஆகிவிடுகிறது. இங்கே எதிர்மறை சிந்தனைகளை அறிக்கை செய்துவிடுகிறார்கள். அதற்கு மாறாக **நம் பிள்ளைகளிடம் உன்னால் இது முடியும், நீ நல்ல நிலைக்கு வந்து விட வேண்டும் என்று சொல்வது ஒரு நேர்மறை சிந்தனையாகும்.** நேர்மறையாக சிந்திக்கும்பொழுது எல்லாமே நன்மையாக முடியும். நாம் எப்படி பிள்ளைகளை ஊக்குவிக்கிறோம்? ஆசிரியர்கள் மாணவர்களை எப்படி ஊக்குவிக்கிறார்கள் என்பது பெரிய கேள்விக்குறியாக இன்றைக்கு இருக்கிறது

ஒரு ஆராய்ச்சியாளர் **"உன்னையே நீ நம்பவில்லை என்றால் வேறு யாரை நம்புவாய் என்று கூறுகிறார்.** உங்களைப் பற்றி நீங்களே ஒரு எதிர்மறையான எண்ணத்தை வைத்துக் கொண்டு சென்றால் நிச்சயமாக சில காரியங்களை சாதிக்க முடியாது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இந்த பிரச்சனை இருக்கிறது. **நேர்மறையான சிந்தனை நமக்குள் வரும்பொழுது அது ஒரு மேன்மையான, அசாதாரணமான காரியங்களை நம்முடைய வாழ்க்கையில் கொண்டு வரும்.** உலகத்தில் சாதனை படைத்த சாதானையாளர்களைகுறித்து பார்க்கும் பொழுது அவர்களது நேர்மறை சிந்தனைகள்தான் அவர்களை உச்சத்திற்கு கொண்டு சென்றுள்ளதாக சொல்லப்பட்டு இருக்கிறது. ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வாங்கின நீரஜ்சோப்ராவை குறித்து பார்க்கும் பொழுது அவருடைய வாழ்க்கையில் ஒரு நேர்மறை சிந்தனை ஓடிக் கொண்டே தான் இருந்திருக்கிறது. நம்முடைய கனவுகள் எல்லாம் உண்மையாக மாற வேண்டும் என்றால் நேர்மறை சிந்தனை நமக்கும் இருக்க வேண்டும். அப்பொழுது மாபெரும் சாதனைகளை நாம் சாதிக்க முடியும்.

ஆம் பிரியமானவர்களே! உங்களுடைய வாழ்க்கையிலும் நல்ல காரியங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் நேர்மறையாக எண்ணுங்கள். நாம் எல்லாம் மனிதராக இருக்கிற படியால் எதிர்மறை சிந்தனை சில வேளைகளில் வரத் தான் செய்யும். ஆனால் அதிகபட்சம் அதை தள்ளிவிட முயற்சி செய்ய வேண்டும். இந்த மாதத்திலும் இதன் அடிப்படையில் வேதப் புத்தகத்திலிருந்து ஒரு மனிதனை குறித்து கோடிட்டு காட்ட விரும்புகிறேன். **எந்த சூழ்நிலையிலும் நல்ல காரியத்தை சிந்திக்கிறவன் தான் நேர்மறை சிந்தனையாளராக இருக்க முடியும். எண்ணாகமம் புத்தகம் 13, 14ஆம் அதிகாரம், யோசுவாவின் புத்தகம் 14ஆம் அதிகாரத்தையும்** மையமாக வைத்துக் கொண்டு இந்த சம்பவத்தை நான் உங்களோடுகூட பகிர்ந்துகொள்ள இருக்கிறேன். **இந்த நேர்மறை சிந்தனையுள்ள மனிதர் பெயர் தான் காலேப்.** இவரை குறித்தே நாம் தியானிக்க போகின்றோம். எப்படிப்பட்ட சூழ்நிலையில் காலேப் ஒரு நேர்மறையான சிந்தனையுடையவராக இருந்தார் என்பதை குறித்து பார்ப்போம்.

- **அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி: நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம். நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம் என்றான் - எண்ணாகமம் 13: 30**

காலேப் என்றால் திராணி உள்ளவன் என்று அர்த்தம். அவன் பெயருக்கேற்றபடியே அவன் வாழ்ந்துள்ளான். இந்த சம்பவத்தை நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம் என்றால். மோசேக்கு கர்த்தர் கொடுத்த கட்டளை இஸ்ரேல் ஜனங்களை கானானுக்குள் கொண்டு போக வேண்டும். இவர்கள் எகிப்திலிருந்து கானான் தேசத்தை நோக்கி பயணம் செய்துக் கொண்டு இருக்கிறார்கள். தேசத்தை விட்டு வெளியே வந்து எத்தனையோ நூற்றாண்டுகள் ஆகிவிட்டது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மீண்டும் அந்த தேசத்திற்குள் போகும் பொழுது அங்கு யாரெல்லாம் குடியிருக்கிறார்கள் என தெரியவில்லை. அந்த தேசத்தை போய் நீங்கள் வேவு பார்த்துவிட்டு வாருங்கள் என்று மோசே, கோத்திரத்திற்கு ஒருவராக 12 பேரை தேர்ந்தெடுக்கின்றான். அதில் **யூதா கோத்திரத்தில் எப்புன்னேயின் குமாரன் காலேப்பும் ஒருவனாக இருக்கின்றான். நான் இஸ்ரவேல் புத்திதரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு. ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபு வாகிய புருஷனை அனுப்பவேண்டும் என்றார் - எண்ணாகமம் 13: 2** இந்த கட்டளையை மோசேக்கு கர்த்தர் கொடுக்கின்றார். அதன்படி இந்த 12 பேர் புறப்படுவதற்கு முன்பு மோசே அவர்களிடம் கூறியது, அந்த தேசம் எப்படிப்பட்டது? அங்கே குடியிருக்கிற மக்கள் பலவான்களா, பலவீனரா? கொஞ்சம் மனிதர்களா அல்லது நிறைய பேர் உள்ளார்களா? அந்த தேசத்தின் மண்வளம் எப்படி இருக்கிறது. தண்ணீர் எப்படி இருக்கிறது. மக்கள் பெரிய பெரிய வீட்டில் குடியிருக்கிறார்களா? அல்லது எப்படிப்பட்ட வீடுகளில் குடியிருக்கிறார்கள். இப்படி எல்லா வற்றையும் பாருங்கள், பார்த்துவிட்டு முடிவில் எனக்கு அறிக்கை தாருங்கள் என அவர்களிடம் கூறுகிறான். அதன்படி இந்த 12 பேரும் அந்த தேசத்திற்கு சென்று வேவு பார்த்துவிட்டு வருகிறார்கள். இஸ்ரவேலின் தலைவர்கள், இஸ்ரவேல் ஜனங்கள் மற்றும் சபையார், மூப்பர்கள் எல்லாம் இந்த 12 பேரும் திரும்பி வந்து என்ன சொல்லப் போகிறார்கள் என்று ஆவலோடு காத்திருக்கிறார்கள்.

ஆம் பிரியமான தேவ ஜனமே நீங்களும் கூட நிறைய எதிர்பார்ப்போடு சில காரியங்களுக்காக காத்திருக்கலாம். அது உங்கள் பிள்ளைகள் நேர்முகத் தேர்விற்கு சென்றுவிட்டு வந்தார்களே வேலை கிடைக்குமா என்று எதிர்பார்த்திருக்கலாம். அதேபோல உங்கள் பிள்ளைகளின் திருமணம் காரியமாக பேசினோமே அது என்னவாயிற்று? மேல் படிப்பிற்கு விண்ணப்பித்தோமே இடம் கிடைக்குமா, கிடைக்காதா? என்று ஒரு எதிர்பார்ப்போடு காத்திருக்கலாம். எல்லா மனிதர்களுக்குள்ளும் ஒரு எதிர்பார்ப்பு இருக்கவே செய்யும். அதேபோல வேவு பார்க்க சென்ற 12 பேரும் சொல்லப் போகும் காரியத்திற்காக மோசேயிலிருந்து எல்லோரும் காத்திருக்கிறார்கள். அந்த சமயத்தில் 10 பேர் எல்லாரையும் தங்கள் முன்னால் இருக்க வைத்து **"நாங்கள் சென்று பார்த்து வந்த தேசம் பாலும்,**

**தேனும் ஓடுகின்ற தேசம் தான், அந்த தேசத்தில் இருக்கிற ஜனங்கள் பலவான்கள் தான், அவர்கள் இருக்கிற வீடுகள் சாதாரண குடிசை அல்ல, பெரிய பெரிய கான்கிரீட் வீடுகளாக உள்ளது. பட்டணமும் அரணிப்பாக மிகவும் பெரியவைகளாக இருக் கிறது. அங்குள்ளவர்கள் மிகவும் பாதுகாப்பாக, சகல வசதிகளுடன் வாழ்கிறார்கள். சாதாரணமாக அவர்களை வெளியேற்ற முடியாது"** எனக் கூறினார்கள்.

அன்பானவர்களே! இந்த தேசம் இஸ்ரேல் ஜனங்களுக்கு வாக்குக் கொடுக்கப்பட்ட தேசம். கானானியருக்கோ, ஏத்தியருக்கோ, எபூசியருக்கோ அல்லது அமலேக்கியருக்கோ சொந்தமான தேசம் இதுவல்ல. ஆனால் இஸ்ரேல் ஜனங்கள் அந்த தேசத்தை விட்டு வெளியேறி எகிப்தில் வந்து குடியேறி விட்டார்கள். அந்த சூழ்நிலையில் இந்த தேசம் மற்றவர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுவிட்டது. அமலேக்கியர் தென்புறமாக இருக்கிறார்கள், கானானியர் கடல் அருகே இருக்கிறார்கள். அந்த ஜனங்களை எதிர்க்க நம்மால் கூடாது, அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்கள், இராட்சஷர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்பாக நாம் ஒரு வெட்டுக்கிளியை போல இருக்கிறோம் என்று அந்த தேசத்தை குறித்து துர்ச்செய்தியை பத்து பேரும் பரப்பினார்கள். இதனை கேட்ட இஸ்ரேல் ஜனங்கள் புலம்ப ஆரம்பித்து விட்டார்கள். இதற்குத் தான் எங்களை இங்கு அழைத்து வந்தாயா? நாங்கள் எகிப்திலேயே இருந்து இருப்போமே என்று மோசேயிடமும், ஆரோனிடமும் ஜனங்கள் முறையிடுகிறார்கள். இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில் தலைவனாகிய மோசேயின் அனுமதியில்லாமலேயே அந்த இடத்தில் காலேப் தைரியமாக எழும்பி நிற்கிறான். மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி **"நாம் இப்பொழுதே சென்று அந்த தேசத்தை சுதந்தரித்துக் கொள்வோம், அதை எளிதாக ஜெயித்துவிடலாம்" என்று எதிர்மறை செய்திகளுக்கு மத்தியில் நேர்மறை யான செய்தியை கூறுகிறான். துர்செய்தியை பரப்பிக் கொண்டிருக்கும் அந்த சூழ்நிலையில் காலேப் எளிதாக அந்த தேசத்தை மேற்கொள்ள லாம் என்று ஆணித்தரமாக மீண்டும் கூறுகிறான்.** காலேப்புடன் அடுத்த ஒரு நபரும் சேர்ந்து கொண்டான். அவன் பெயர் யோசுவா இவன் எப்பிராயீம் கோத்திரத்தில் இருந்து வேவு பார்க்க சென்றவன். ஜனங்களின் கூக்குரல், புலம்பல் அதிகமாகிக் கொண்டே போனபடியால் மோசேயும் ஆரோனும் இஸ்ரேல் ஜனங்கள், சபையாருக்கு முன்பாக முகங்குப்புற விழுகிறார்கள். அதைப் பார்த்த காலேப் மற்றும் யோசுவாவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இரண்டு பேரும் தங்கள் வஸ்திரங் களை கிழித்து கொண்டார்கள். வஸ்திரங்களை கிழிப்பது என்பது கர்த்தருக்கு முன்பாக தாழ்த்துவது என்று அர்த்தம். முகங்குப்புற விழுவதும் கர்த்தரிடம் தங்களை தாழ்த்துவதாகும். காலேபும், யோசுவாவும் தங்களை கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தி, இஸ்ரேல் புத்திரர் எல்லோரையும் நோக்கி **"நாங்கள் சுற்றிப் பார்த்த தேசம் நல்ல தேசம் தான், வாக்குப்பண்ணின தேசம் எப்படி கெட்ட தேசமாக இருக்க முடியும், கர்த்தர் நம்மேல் பிரியமாய் இருந்தால் பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை நமக்குக் கொடுப்பார், கர்த்தருக்கு விரோதமாக கலகம் பண்ணாதிருங்கள், அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டியில்லை, கர்த்தர் நம் மேல் பிரியமாய் இருப்பாரானால் அதை நாம் சுதந்தரித்துக்கொள்ள முடியும், என்றும் அவர்கள் நமக்கு இரையாவார்கள், அவர்களை காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப் போயிற்று"** என்று காலேபும்யோசுவாவும் எவ்வளவு தைரியமாக அந்த இடத்தில் நேர்மறையாக சொல்கிறதை பார்க்கிறோம்.

ஒரு சமயத்தில் ஒரு தாயார் அவர்கள் வாழ்ந்த வீட்டைக் குறித்து சொன்னது, அந்த வீடு கர்த்தருடைய பாதுகாப்பினால் மாத்திரமே இருக்கிறது என்றும், தேவ நிழல் அந்த வீட்டை காப்பதாகவும், ஒரு தூதன் தன் சிறகுகளால் அந்த வீட்டை மூடிக்கொண்டு இருக்கிறான் என்றும் சொன்னார்கள். தொடர்ந்து அவர்கள் சொன்ன மற்றொரு காரியம், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அந்த வீட்டை பாதுகாத்த தேவ நிழல் அங்கே இருக்காது என்றும் கூறினார்கள். இவையாவும் தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்தின வெளிப்பாடு என்றார்கள். தேவ வெளிப்பாட்டின்படியே தேவனுடைய நிழல் அந்த வீட்டை அற்புதமாக பாதுகாத்து வந்தது. அதே சமயத்தில் அந்த குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அந்த வீட்டைப் பாதுகாத்த தேவ நிழல் விலகிவிட்டது என்பதை அந்த தாயும், குடும்பத்தாரும் பிரதியட்சமாக புரிந்துக்கொண்டார்கள். ஒரு தாய்க்கு அவர்கள் வாழ்ந்த வீட்டைக்குறித்து எவ்வளவு அருமையாக தேவன் வெளிப்படுத்தியுள்ளார். அதைப்போலவே காலேப் இங்கு கூறுகிறார் **"அவர்களை பாதுகாத்த நிழல் இப்பொழுது விலகிற்று, ஏனென்றால் அந்த தேசத்தை சுதந்தரித்துக் கொள்வதற்காக அவர் களை காத்த நிழல் இப்பொழுது நம்மை பாதுகாக்க வந்துவிட்டது. ஆகவே அவர்கள் நமக்கு இரையா வார்கள்"** என்றான். இது தான் நேர்மறையான சிந்தனை. காலேபிற்கு எப்படி இத்தகைய நேர்மறை யான சிந்தனை வந்தது என்று நாம் தியானிக்கும் பொழுது இங்கே **அவனைக் குறித்ததான ஐந்து குணாதிசயங்களைப்பற்றி நான் உங்களோடுகூட பகிர்ந்துக்கொள்ள விரும்புகின்றேன்.** அப்பொழுது இக்காரியங்களை நீங்கள் எளிதாக புரிந்துக்கொள்ள முடியும்.

## 1. காலேப் வேறே ஆவியை உடையவனாக இருந்தான்.
## (Caleb had a different spirit in him)

**என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய்வந்த தேசத்திலே அவனைச் சேரப் பண்ணுவேன். அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் - எண். 14: 24**

வேவு பார்க்க சென்றது 12 பேர். அதில் பத்து பேர் துர்ச்செய்தியை பரப்பி கொண்டிருந்தார்கள். இரண்டு பேர் மாத்திரமே தைரியமாக நேர்மறையாக கூறினார்கள். அதில் ஒருவர் தான் காலேப். காலேப் வேறே ஆவியை உடையவன் என வேதம் கூறுகிறது. இவன் ஒரு வித்தியாசமான மனிதன். எனவே தான் நற்செய்தியை அங்கே சொல்கிறான். எப்பொழுதுமே எதிர்மறையாக பேசுபவர்களின் கூட்டம் அதிகமாகத் தான் இருக்கும். இதை வாசிக்கும் அன்பு சகோதர, சகோதரிகளே! உங்கள் வாழ்க்கையை நீங்கள் யோசித்து பாருங்கள், நீங்கள் நேர்மறையாக சிந்திக்க வேண்டும் என்றால் உங்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் நிச்சயமாக இருக்க வேண்டும். அவர் இருக்கும் பொழுது எந்த ஒரு காரியத்தையும் புரிந்து கொள்ளும் திறனை கர்த்தர் உங்களுக்குத் தருவார். **"என் தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவன்"** என்று கர்த்தர் உரிமையோடுகூட சொல்வதை நாம் வேதத்தில் வாசிக்கின்றோம். அங்குள்ள எல்லோரும் மாற்று கருத்தை சொன்னாலும் காலேப் மாத்திரம் நேர்மறையான கருத்தை சொல்லி அதில் உறுதியாக இருப்பதை நாம் காண முடிகின்றது. அதற்கு காரணம் அவன் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்பட்ட ஓர் மனிதனாக காணப்பட்டான்.

பிரியமானவர்களே, உங்களுக்குள்ளும் கர்த்தருடைய ஆவியானவர் வாசம் பண்ணுகிறாரா என்பதை இன்றே சிந்தியுங்கள்!

## 2. காலேப் கர்த்தரை முழுமையாக உத்தமமாய் பின்பற்றினான்!
## (Caleb has followed the Lord whole heartedly)

**காலேப்பிற்குள் ஒரு கீழ்ப்படிதல் காணப் பட்டது. எந்த ஒரு கேள்வியும் கேட்காமல் கர்த்தரை முழுமையாக, உத்தமமாய் பின்பற்றினான். (எண். 32:11; உபாகமம் 1:36)**

**அந்நாளிலே மோசே: நீ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடியினால், உன் கால் மிதித்த தேசம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் என்றைக்கும் சுதந்தரமாயிருக்கக் கடவது என்று சொல்லி, ஆணையிட்டார் - யோசுவா 14: 9**

இந்த வார்த்தை மோசே காலேப்பை பார்த்து கூறுகின்றதான வார்த்தையாகும். நேர்மறை சிந்தனை உடையவர்களுக்கு சந்தேகம் என்பது வரக் கூடாது. அன்பு தேவ ஜனமே நீங்கள் கர்த்தரை முழுமையாக பின்பற்றுகின்ற பிள்ளைகளாக இருக்கிறீர்களா என்பதை சிந்தித்துப் பாருங்கள். அப்படி நீங்கள் முழுமையாக பின்பற்றுவீர்கள் என்றால் அவர் உங்களுக்கு நேர்மறையான சிந்தனையை கொடுத்துக் கொண்டே இருப்பார். பிசாசு எதிர்மறையான சிந்தனையை உங்களுக்குத் தந்தாலும் கர்த்தர் உங்களை பார்த்து **"உன்னால் முடியும், உன்னால் சாதிக்க முடியும், வெற்றி பெற முடியும்"** என்கிற நேர் மறையான சிந்தனையை தருவார். அப்போஸ்தல னாகிய பவுல் என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டுஎன்று அறிக்கை செய்கின்றார். **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. (பிலிப்பியர் 4:13)** கடைசி வரை காலேப் கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினான். நீங்களும் கர்த்தரை முழுமையாக உத்தமமாய் பின்பற்ற ஒப்புக் கொடுப்பீர்களா?

## 3. காலேப் தைரியசாலியாக இருந்தான்!
## (Caleb was a Courageous Man)

காலேப் தைரியமானவன் என்று எப்படி கூறுகின்றோம். மோசே ஒரு தலைவனாக அங்கே இருந்தான். அவனுக்கு உதவியாக ஆரோன் இருந்தான். ஜனங்கள் எல்லோரும் இருந்தார்கள். காலேபும் ஜனங்களில் ஒருவன் தான். வேவு பார்க்க தேர்வு செய்யப்பட்ட மனிதர்களில் ஒருவன் அவ்வளவு தான். ஆனால் அவனுக்குள் தைரியம் எப்படி வந்தது. எல்லோரும் கூக்குரலிடுகிறார்கள், அந்த சமயத்தில் காலேப் தைரியமாய் எழும்பி நின்று சொன்ன வார்த்தைகளாவன. **அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி: நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம். நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம் என்றான். (எண். 13:30)** இந்த தைரியம் எப்படி இவனுக்கு வந்தது. இந்த தைரியதை எந்த ஒரு மனிதனும் நிச்சயமாக தர முடியாது. இது தேவனிடத்தில் இருந்து அவனுக்கு வந்தது. ஏனென்றால் அவன் வேறே ஆவியால் நிரப்பப்பட்டு இருந்தான். கர்த்தரை முழுமையாக, உத்தமமாக பின்பற்றினபடியால் அவனுக்கு இந்த தைரியம்

வந்தது. நீங்கள் நேர்மறையான சிந்தனை உடையவர்களாக இருப்பீர்கள் என்றால், உங்களை சுற்றிலும் உள்ளவர்கள் எதிர்மறையான கருத்துக்களை கூறினாலும் உங்களுக்குள்ளே ஒரு தைரியம், நம்பிக்கை இருக்கும். **சங்கீதம் 46:2-3ல்** நாம் வாசிப்பது போல **"பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்"** ஆம்! நீங்கள் பயப்பட மாட்டீர்கள். உங்களுக்குள்ளே தைரியம் வரவேண்டும் என்றால் நீங்கள் தூய ஆவியானவரின் நடத்துதலின்படி உண்மையாக, உத்தமமாக தேவனை பின்பற்றும் பொழுது, யார் என்ன சொன்னாலும் நேர்மறையான சிந்தனை உள்ளவர்களாக காணப்படுவீர்கள். இந்த சிந்தனை வரும்பொழுது தைரியம் நிச்சயம் உங்களுக்குள் வரும். நிச்சயமாக இந்த வியாதி சுகமாகும். எனக்குள்ளே இருக்கிறவர் பெரியவர் என்று நினைக்கும் பொழுது அது சுகமாகிவிடும். எனவே இப்பொழுதே ஒரு முடிவெடுத்து, தேவ சமூகத்தில் ஜெபியுங்கள். கர்த்தாவே, **நேர்மறையாக சிந்திக்கும் திறனை எனக்குத் தாரும்** என்று கேளுங்கள். அப்பொழுது நிச்சயம் பெரிய மாற்றத்தை காண்பீர்கள்.

## 4. காலேப் செயல்படுகிறவனாக காணப்பட்டான்!
## (Caleb - the man of Action)

அன்பான தேவ ஜனமே! நம்மில் அநேகம் பேர் எந்த ஒரு காரியத்தையும் சொல்வார்களே தவிர, செயலில் ஒன்றும் இருக்காது. ஆனால், காலேப் சொல்வது மாத்திரமல்ல, சொன்னதை செய்கிறவனாக காணப்பட்டான். மோசே, காலேபிடம் அந்த தேசத்திற்கு வேவு பார்க்க செல் என்று சொன்னவுடன் சென்றான். பார்த்துவிட்டு திரும்பி வந்து அதைக் குறித்து அறிக்கை செய்தான். அதுவரை வேவு பார்க்க சென்ற மற்றவர்களைக்காட்டிலும், காலேப் மாத்திரமே செயல்படுகிறவனாக **"அந்த தேசத்தை சுதந்தரித்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும், எளிதாக அதை ஜெயித்துக் கொள்ளலாம்"** என்று நேர்மறையாக கூறினான். அதே போல அந்த தேசத்தை அவர்கள் சுதந்தரித்துக் கொண்டார்கள் என்பதை நாம் அறிய முடியும். யார் யாரெல்லாம் முறுமுறுத்தார்களோ அவர்கள் அந்த தேசத்திற்குள் போக முடியவில்லை. நேபோ மலை வரும் பொழுது மோசேயின் காலம் முடிந்தது. அதன் பின்பு யோசுவா அந்த ஜனங்களை வழி நடத்துகிறான். கானான் தேசத்திற்குள் யாரெல்லாம் சென்றார்கள், செல்லவில்லை என்பதை குறித்து வேதத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. **சபையார் எல்லாரும் அவனுக்கு விரோதமாய் முறுமுறுக்கும் படி அந்தத் துர்ச்செய்தியைச் சொன்னவர்களாகிய அந்த மனிதர் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்தார்கள். தேசத்தைச் சுற்றிப்பார்க்கப் போன அந்த மனிதரில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும் மாத்திரம் உயிரோடிருந்தார்கள். (எண்.14:37, 38)** துர்ச்செய்தியை சொன்னவர்கள் கர்த்தருடைய வாதையால் மரித்துப் போனார்கள். யோசுவாவும், காலேபும் மாத்திரம் உயிரோடுகூட பாதுகாக்கப் பட்டார்கள்.

இஸ்ரேல் ஜனங்கள் இப்படி பேசிக் கொண்டிருக்கிறார்களே, இவர்களை எப்படி நான் அந்த கானானுக்குள் நடத்துவது,என்று மோசே கர்த்தரிடம் முறையிடுகிறான். அப்பொழுது கர்த்தர் அவனிடம் **"இந்த தலைமுறையில் காலேப், யோசுவா தவிர வேறு யாரும் கானானுக்குள் போக மாட்டார்கள்"** என்று பதிலளிக்கின்றார். இதன் பொருள் இந்த தலைமுறையின் குழந்தைகள் தான் அந்த தேசத்திற்குள் செல்வார்கள் என்பதாகும். .

அன்பான தேவ ஜனங்களே! **அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள். எனக்குக் கோபம் உண்டாக்கின வர்களில் ஒருவரும் அதைக் காண மாட்டார்கள். (எண்.14:23)** எனக்குக் கோபம் உண்டாக்கின ஒருவரும் அந்த தேசத்தை காண மாட்டார்கள் என்று சொன்ன தேவன், அதற்குப் பிறகு சுலபமாக செல்லக்கூடிய இடத்தை இவர்கள் இன்னும் சில வருடங்கள் சுற்றிக்கொண்டிருக்கும்படி செய்கிறார். தொடர்ந்து வழியிலேயே அத்தனை பேரையும் மரிக்க வைத்து, புதிய தலைமுறையே அந்த கானானுக்குள் செல்லும்படி செய்கிறார். அதற்கு முந்தின தலைமுறையில் சென்றது யோசுவாவும், காலேபும் மட்டும் தான் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுது தேசத்தை யோசுவா பங்கிட்டு கொடுக்கிறான். அப்படி பங்கிட்டு கொடுக்கும் பொழுது மோசே காலத்தில் சொன்ன ஒரு காரியத்தை யோசுவாவிடம் காலேப் ஞாபகப்படுத்துகிறான்.

இரண்டு பேரும் ஒன்றுபோல வேவு பார்க்க சென்றார்கள்.ஆனால் இப்பொழுது சில வித்தியாசத்தை பார்க்க முடிகிறது. காலேப் அன்றைக்கு எல்லாருக்கும் முன்பாக தைரியமாக அந்த தேசத்தை மேற்கொள்ளலாம் எனக் கூறினான். ஆனால், தலைமைத்துவத்தில் யோசுவா வந்துவிட்டான். காலேப் இப்பொழுது யோசுவாவிற்கு கீழ்தான் இருக்கிறான். ஆனாலும் இங்கேயும் காலேப் தைரியமாக செயல்படுகிறவனாக இருந்தான். யோசுவாவிடம் **"கர்த்தருடைய தாசனாகிய மோசே**

**என்னை காதேஸ்பர்னெயாவிலிருந்து அனுப்புகிற போது எனக்கு நாற்பது வயதாயிருந்தது, என் இருதயத்திலுள்ளபடியே அவருக்கு மறுசெய்தி கொண்டுவந்தேன். அந்நாளிலே மோசே நீ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றின படியினால்,"** உன் கால் மிதித்த தேசம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் என்றைக்கும் சுதந்தரமாயிருக்கக் கடவது என்று சொல்லி ஆணையிட்டார். **(யோசுவா 14:9)** இப்போதும் கர்த்தர் சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார், இஸ்ரவேலர் வனாந்தரத்தில் சஞ்சரிக்கையில், கர்த்தர் அந்த வார்த்தையை மோசேயோடே சொல்லி இப்போது நாற்பத்தைந்து வருஷமாயிற்று. இதோ இன்று நான் என்பத்தைந்து வயதுள்ளவன். மோசே என்னை அனுப்புகிற நாளில் எனக்கு இருந்த அந்தப் பெலன் இந்நாள்வரைக்கும் எனக்கு இருக்கிறது. யுத்தத்திற்குப் போக்கும் வரத்துமாயிருக்கிறதற்கு அப்போது எனக்கு இருந்த பெலன் இப்போதும் எனக்கு இருக்கிறது. ஆகையால், கர்த்தர் அந்நாளிலே சொன்ன இந்த மலைநாட்டை எனக்குத் தாரும், அங்கே ஏனாக்கியரும், அரணிப்பான பெரிய பட்டணங்களும் உண்டென்று நீர் அந்நாளிலே கேள்விப்பட்டீரே, **கர்த்தர் என்னோடிருப்பாரானால், கர்த்தர் சொன்னபடி, அவர்களை துரத்திவிடுவேன் என்றான்.** இந்த சம்பவம் **யோசுவா 14:6-12-ல்** கூறப்பட்டுள்ளது. காலேப் யோசுவாவிடம் தைரியமாய் கேட்டான். அதற்கு யோசுவா எந்தவித பொறாமையும் கொள்ளாமல் அதற்கு சம்மதிக்கிறான். அந்த மலைநாட்டில் ஏனாக்கியர் என்கிறதான மிகப் பயங்கரமான மனிதர்கள் இருக்கிறார்கள். அது மிகவும் கடினமான ஒரு பகுதியாகும். அதைத் தான் காலேப் கேட்கிறான். காலேபின் நேர்மறையான சிந்தனையே அவனை இப்படி கேட்கச் செய்தது. இப்படிப்பட்ட சிந்தனை உங்களுக்குள்ளும் வரவேண்டும் என்றால் கர்த்தர் உங்களோடு இருக்க வேண்டும். அப்பொழுது தான் நேர்மறை எண்ணங்கள் வரும். எவ்வளவு பெரிய பிரச்சனையாக, போராட்டமாக இருக்கட்டும். கர்த்தர் என்னோடு இருப்பாரானால் அவைகள் எல்லாம் ஒன்றுமில்லை என்ற உறுதியான நிலை பாட்டிற்கு வந்துவிடுவீர்கள்.

## 5. காலேப் அவன் செயல்பாட்டிற்கு ஏற்ற பலனை பெற்றுக் கொண்டான்
### (Caleb was rewarded for his actions)

கர்த்தர் காலேபோடு இருந்து அந்த நாட்டை அவனிடம் கொடுத்தார் என்பதை நாம் வேதத்தில் காணலாம். ஒரு செயல் செய்தால், அதற்குரிய பலன் கட்டாயம் கிடைக்கும். காலேப் மலைநாட்டுக்குள் சென்று அங்கிருந்த அரக்கர்களோடு போரிட்டு அவர்களை விரட்டுகிறான். அவனுடைய செயல் பாட்டிற்கு பலன் கிடைத்தது. **அப்பொழுது யோசுவா: எப்புன்னேயின் குமாரனாகிய காலேபை ஆசீர் வதித்து, எபிரோனை அவனுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தான். ஆதலால் கேனாசியனான எப்புன் னேயின் குமாரனாகிய காலேப் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடி யினால், இந்நாள் மட்டும் இருக்கிறபடி, எபிரோன் அவனுக்குச் சுதந்தரமாயிற்று. யோசுவா 14:13-14ம்** வசனங்களில் எபிரோன் அவனுக்கு சுதந்தரமாயிற்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது. யோசுவா காலேபை ஆசீர்வதித்து அதை கொடுத்தான்.

எனக்கன்பான சகோதர, சகோதரிகளே! இன்றைக்கு கர்த்தர் உங்களிடம் இதைத் தான் எதிர்பார்க்கின்றார். உங்கள் செயல்பாட்டிற்கு ஒரு பலன் வேண்டும் என நீங்கள் கடினமாக உழைக்கின்றீர்களா? நிச்சயமாக அதற்குப் பலன் உண்டு. காலேபுக்கு பலன் செய்தவர் உங்களுக்கும் கட்டாயம் பலன் கொடுப்பார்.

எனக்கன்பான வாசகர்களே, இந்த செய்தியில் காலேபுடைய வாழ்க்கையின் மூலமாய் கர்த்தர் உங்களோடுகூட பேசி இருப்பார் என நினைக்கிறேன். நீங்களும் நேர்மறையான சிந்தனை உடையவர்களாக மாறுங்கள். இந்த உலகமே எதிர்மறையான சிந்தனையில் இருந்தாலும் நீங்களோ நேர்மறையான சிந்தனை உடையவர்களாக இருங்கள். இப்படிப் பட்ட சிந்தனை உங்களுக்குள் இருக்கும் பொழுது நீங்கள் ஏதோ பத்தோடு பதினொன்றாக அல்ல, தனித்துவ மாக காணப்படுவீர்கள். உங்களை பாதுகாக்கின்ற நிழல் உங்களோடு இருக்க வேண்டும் என்றால், நீங்கள் எதிர்பார்க்கின்ற காரியம் நடக்க வேண்டும் என்றால் கர்த்தர் உங்களோடுகூட இருக்க வேண்டும். அப்பொழுது நீங்கள் சிந்திக்கிற சிந்தனை நேர் மறையாக இருக்கும். நீங்கள் செய்கின்ற செயல்களும் நல்லவைகளாக இருக்கும். சூழ்நிலை எப்படி இருந்தாலும் அதைப் பற்றி நீங்கள் யோசிக்க மாட்டீர்கள். உங்களுடைய குறிக்கோள் நல்லவை களையே நோக்கிப் பார்க்கும். அன்பான தேவ பிள்ளைகளே! இன்றைக்கு உங்கள் வாழ்க்கையில் ஒரு தீர்மானங்கள் எடுங்கள். தேவனே **"உம்முடைய ஆவியை எனக்குத் தாரும், உம்மை முழுமையாக பின்பற்ற உதவி செய்யும், காலேபை போல தைரியசாலியாய் செயல்படுகின்ற ஒரு மனிதனாக, நேர்மறையாக சிந்திக்கின்ற சிந்தனையாளராக என்னை மாற்றும்"** என்று கேளுங்கள். அப்படி முழு மனதோடு நீங்கள் தேவனிடம் கேட்கும் பொழுது நிச்சயமாய் கர்த்தர் அந்த கிருபைகளை உங்களுக்குத் தருவார். காலேபுக்கு நல்ல ஆசீர்வாதமான பலனை கொடுத்தவர் உங்களுக்கும் கொடுத்து உங்களை ஆசீர்வதிப்பார்.



# Praise Report
# துதி அறிக்கை

## புதிய காரியத்தைச் செய்த தேவன்!

**இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன், இப்பொழுதே அது தோன்றும். ஏசாயா 43:19**

என் பெயர் பிலிப். ஐந்து வருடங்களுக்கு முன்பு விஜயவாடாவில் நடைபெற்ற விடுதலைப் பெருவிழாவில் நான் கலந்துக் கொண்டேன். கூட்டம் நடந்துக் கொண்டிருந்த நேரத்தில், ஜெப வேளையில் சகோதரர் Dr.**ஆனந்த ஸ்திரா** அவர்கள் என்னை அழைத்து, என் தலைமீது தம் கரங்களை வைத்து, உன்னை கர்த்தர் வல்லமையாக பயன்படுத்தப் போகிறார். நீ சபை ஆரம்பித்து, அதனுடைய போதகராய் இருப்பாய் என்று தீர்க்கதரிசனமாக கூறினார்கள். அதன்படியே **நான் வசிக்கும் இடத்திலிருந்து 600கி.மீ தள்ளி ஒரு Tribal ஏரியாவில் உள்ள எழுத படிக்க தெரியாத 70 வாலிபர்களை சந்தித்து அவர்களுக்கு சுவிசேஷம் சொல்ல கர்த்தர் உதவி செய்தார். அவர்களுக்கு கிறிஸ்துவின் அன்பை பற்றிச்சொல்லி, பயிற்சி கொடுத்து வருகிறேன். அது மாத்திரமல்ல பல கிளை சபைகளை துவங்குவதற்கும் கர்த்தர் உதவி செய்தார். சகோதரர் மேலிருந்த அபிஷேகம் அப்படியே எனக்குள்ளும் கிரியை செய்து வருகிறதை உணர்கிறேன்.** ஒன்றுமில்லாத பாத்திரமாயிருந்த என்னை அழைத்து, ஊழியத்தை கொடுத்து, பெலப்படுத்தி, பல கிளை சபைகளை உருவாக்கிக் கொடுத்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். விடுதலைப் பெருவிழா கூட்டங்களை நடத்தி எங்களுக்காக ஜெபிக்கிற சகோதரருக்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன். அன்பரின் ஊழியத்திற்கு **Rs.**10,000/-ஐ காணிக்கையாகத் தந்து கர்த்தரை மகிமைப்படுத்துகிறேன். **Pr. பிலிப், விஜயவாடா.**

## ஜெபத்தை கேட்டு, கண்ணீரை துடைத்த தேவன்

என்னுடைய மூத்த மகனுக்கு சில வருடங்களாக சரியான வேலை இல்லாமல் அதிக கஷ்டத்துடன் இருந்தோம். சகோதரர் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் நடத்திய கூட்டத்திற்கு வந்து அவரை நேரில் சந்தித்து என் மகனுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். சகோதரர் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். இப்பொழுது **தேவ கிருபையால் என் மகனுக்கு நல்ல வேலை கிடைத்துள்ளது. எங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றிய கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். அன்பரின் ஊழியத்திற்கு Rs.25,000/-த்தை நன்றி காணிக்கையாகத் தருகிறேன்.** **- சகோ. மனோஜ், பிரகாசம் மாவட்டம்.**

## ஞானத்தில் குறைவுள்ளவர்களையும் உயர்த்தும் கர்த்தர்!

நான் படிப்பில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தேன். மருத்துவராக வேண்டுமென்று ஆசைப்பட்டேன். அந்த நேரத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் கூட்டங்கள் குறித்து கேள்விப்பட்டு கலந்துகொண்டேன். சகோதரர் வாயிலிருந்து புறப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. கூட்ட முடிவில் சகோதரர் எனக்காக ஜெபித்தார்கள். அதன்படி நான் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று **MBBS**ல் சேர கர்த்தர் கிருபை செய்தார். அதுமட்டுமல்ல சகோதரர் கூறின தீர்க்கதரிசனத்தின்படியே எங்களுக்கு ஒரு புதிய வீட்டை கர்த்தர் கொடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! **- திரு. நவீன்தேவ், தெலுங்கானா**

## ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவன்

**நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன்.... யோனா 2:9**

எனது மகள் பிரிஸில்லா பிரீத்திக்கு கடந்த டிசம்பர் மாதத்தில் டெங்கு காய்ச்சல் வந்தது. மகள் காய்ச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டாள். அவளுக்கு வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது. மருத்துவர்கள் நான்கு நாட்களாக தொடர்ந்து குளுக்கோஸ் ஏற்றினார்கள். இருப்பினும் எந்த முன்னேற்றமும் இல்லை. **அந்த சமயத்தில் நான் அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு மகளின் சுகத்திற்காக ஜெபிக்கும் படி கேட்டுக் கொண்டேன். உடனே அவர்கள் மகளுக்காக பாரத்தோடு ஜெபம் ஏறெடுத்தார்கள். நானும் அன்பரின் ஊழிய தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு மாதந்தோறும் காணிக்கை அனுப்பி தாங்குவதாக ஒரு பொருத்தனை செய்தேன். கர்த்தர் என் மகளுக்கு பரிபூரண சுகத்தை கொடுத்தார். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!**

**- திருமதி. வசந்தா இராஜுக்கண்ணு, பவானி**

## இரட்டிப்பான நன்மைகளை அருளிய தேவன்

2020-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான் கீழே விழுந்துவிட்டேன். அப்பொழுது என் வலது தோள்பட்டையில் பிடிப்பு ஏற்பட்டு பயங்கர வலியினால், கைகளை நீட்டவும், மடக்கவும் முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். **ஈரோட்டில் மார்ச் மாதம் 4ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். ஜெப நேரத்தில் இரண்டு வருட வலி, வேதனையை நீக்கி கர்த்தர் தாமே அற்புத சுகத்தை எனக்குத் தந்தார்.**

மேலும், கடந்த சில மாதங்களாக வீட்டில் கர்த்தரை மகிழ்ச்சியுடன் ஆராதிக்க முடியாமல் நான் கஷ்டப்பட்டேன். மார்ச் மாதம் 6ம் தேதி மாலை பிரப் ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில், ஜெப நேரத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் **"சாந்தி, பாட்டு பாட முடியவில்லை என வருத்தப்படுகிறீர்களா? இனி பாடுவீர்கள்"** என்று கூறிய போது நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்து கர்த்தரை ஸ்தோத்தரித்தேன். **என்னுடைய மனபாரத்தை அறிந்து, சகோதரர் மூலமாக பதில் கொடுத்த தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரங்கள்!**

**- Sis. சாந்தி பிரபா, ஈரோடு**

## ஆராதனா தொலைக்காட்சியில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சியின்போது விடுதலை தந்த மகத்தான தேவன்!

நான் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தை சார்ந்தவள். 15 வருடமாக பொல்லாத சத்துருவின் போராட்டத்தினால் அதிகமாக கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தேன். அடிக்கடி தற்கொலை செய்ய எண்ணினேன். அச்சமயத்தில் தற்செயலாக ஆராதனா தொலைக்காட்சியில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களுடைய தேவ செய்தியை கேட்டேன். ஜெப வேளையில் சகோதரர் கூறியது, **இந்நிகழ்ச்சியை பார்க்கிற சிலர் பிசாசின் பிடியில் பல வருடம் கஷ்டப் படுகிறீர்கள். இப்பொழுதே இயேசு உங்களை விடுதலையாக்குகிறார் என்று சொன்னவுடன் 15 வருடம் எனக்குள்ளிருந்த தற்கொலை ஆவிகளும், பில்லிசூன்ய ஆவிகளும் ஒரு நொடியில் என்னைவிட்டு அகன்றது. நான் முற்றிலும் விடுதலையானேன். விடுதலை தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!**

**- Sis. பிரியங்கா, ஐதராபாத்**

## நீதி, நியாயத்தில் பிரியப்படும் தேவன்!

என்னுடைய நில சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் ஆறு வருடமாக நடந்து கொண்டிருந்தது. இதற்காக அதிக பணம் செலவழித்தோம். எவ்வளவோ நாட்கள் கடந்தும் எங்களுக்கு நீதி கிடைக்கவில்லை. எனக்கு விரோதமாக பலர் எழும்பி, என் நிலத்தை அபகரிக்க வேண்டும் என்று நினைத்தார்கள். இந்நிலையில் எங்கள் பகுதியில் நடந்த குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் கலந்துகொண்டு **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் எங்கள் நிலையை தெரிவித்தோம். சகோதரர் அவர்களின் மனதுருக்கத்தின் ஜெபத்தை கர்த்தர் கேட்டு ஒரே வாரத்தில் இந்த வழக்கு எங்களுக்கு சாதகமாக தீர்ப்பாகும்படி கிருபை செய்தார். இது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை தந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திரு.சாலொமோன் டானியேல், தெலுங்கானா.**

## கட்டி மறைந்த அதிசயம்!

பல காலமாக என்னுடைய தொண்டையில் தைராய்டு கட்டி இருந்தது. மருத்துவரை அணுகிய பொழுது இது நிச்சயமாக கேன்ஸராக மாறும் என்று கூறினார்கள். இதைக் கேட்டு நானும், எனது குடும்பத்தாரும் மிகவும் கலங்கினோம். இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டோம். சகோதரர் எனக்காக ஜெபித்து **"இது கேன்ஸராக மாறாது கலங்க வேண்டாம்! கர்த்தர் இந்த கட்டியை மறையும்படி செய்வார்"** என்று கூறினார்கள். இதைக் கேட்டு நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன். ஏனென்றால் கட்டி மிகவும் பெரியதாக இருந்தது. மேலும் சகோதரர் **"என் தொண்டையில் கை வைத்து இயேசுவின் நாமத்தில் கட்டி மறைந்து போவதாக"** என்று கூறினார். அந்த நேரமே கட்டி காணாமல் போனது. நான் பூரண சுகம் பெற்றேன். கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவரை துதிக்கின்றேன்.

**- Sis. ரேச்சல், செகந்தராபாத்**

## சோர்வை நீக்கி பிசாசுகளை விரட்டி சமாதானத்தைத் தந்த தேவன்!

ஐதராபாத், வனஸ்தலிபுரம் பகுதியில் உள்ள மக்னாயீம் ஆலயத்தில் நடைபெற்ற அப்போஸ்தல வல்லமை முகாமில் கலந்து கொண்டேன். கடந்த ஐந்து வருடமாக எனது முழு குடும்பமும் சோர்ந்து போய் இருந்தது. தீய ஆவிகள் என்னை அதிகமாக அலைக்கழித்தது. எவ்வளவோ முயற்சிகள் செய்தும் விடுதலை கிடைக்கவில்லை. கடைசியாக ஐதராபாத் வல்லமை முகாமில் கலந்துகொண்ட பொழுது கர்த்தர் என்னோடு பேசினார். தேவனை பற்றி சகோதரர் கூறினதை கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்தேன். நாம் வணங்கும் தேவனுடைய மகிமையை, மாட்சிமையை மிக அற்புதமாக, எளிமையாக, புரியும்படி எடுத்துக் கூறினார். இதைக் கேட்டு ஒரு தெய்வீக சமாதானம் என்னை ஆட்கொண்டது. முடிவில் சகோதரர் எனக்காக, எனது குடும்பத்தின் விடுதலைக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் எங்களை விடுதலையாக்கினார். சோர்வுகளை நீக்கினார். கர்த்தருக்குள் புது பெலன் அடைந்தோம்.

**- Sis. ஜெயஜோதி, ஐதராபாத்**

## அமெரிக்காவிற்கு செல்வதற்கு விசா கிடைக்கும்படி அற்புதம் செய்த தேவன்!



நான் ஆராதனா டிவியில் சகோதரர் ஆனந்தஸ்திரா அவர்களின் செய்தியை தொடர்ந்து கேட்கிறேன். மிகவும் ஆறுதலாக இருக்கிறது. நான் அமெரிக்கா செல்வதற்கு **H1B Visa** விண்ணப்பித்து அதிக நாட்களாய் காத்திருந்தோம். இந்த விசா சாதாரணமாக கிடைக்காது. அநேக தடைகள் வந்தன, அந்த சமயத்தில் அன்பரின் ஊழிய வாட்ஸ் அப்பிற்கு குறுந்தகவல் அனுப்பி, எனக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். எனக்காக பாரத்துடன் ஜெபித்து, கர்த்தருடைய வாக்குத்தத்த வசனங் களை எனக்கு அனுப்பியிருந்தார்கள். அதிக காலம் தடைபட்ட விசா ஜெபித்த சில நாட்களில் கிடைக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். சுமார் மூன்று லட்சத்திற்கும் அதிகமான பேர் விண்ணப்பித்த இந்த காரியத்தில் லாட்டரி **(Lottery)** முறையில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டு, **H1B** விசா கிடைக்கும்படியாக கர்த்தர் அற்புதம் செய்தார். இது உண்மையில் தேவன் என் வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய அற்புதமாகும். என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனை துதிக்கின்றேன்.

**- திரு. சதீஸ், ஐதராபாத்**

## பல காலமாக இருந்த தடைகளை நீக்கிய இயேசு



10 வருடமாக நான் வாங்கின நிலத்தை பத்திரப் பதிவு செய்ய முடியாமல் தடையாக இருந்தது. காரணம் அதற்குரிய ஆவணங்கள் சரியாக கிடைக்கவே இல்லை. நாங்கள் மிகவும் கலங்கி அங்கலாய்த்தோம். அப்படியிருக்க துநி மாவட்டத்திற்கு **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் வருவது குறித்து நண்பர் மூலமாய் கேள்விப்பட்டு ஜெபிக்க சென்றோம். சகோதரர் ஜெபித்து கூறியபடி இரண்டு வாரத்தில் எல்லா ஆவணங்களும் சரியாக கிடைத்து, பத்திர பதிவு செய்து முடிக்கவும் கர்த்தர் அற்புதம் செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திரு. சீனிவாசராவ், துநி**

## மனவிருப்பத்தின்படியே அரசாங்க வேலை கிடைத்தது!

எனக்கு அரசாங்க வேலையில் சேருவதற்கு அதிக ஆர்வம் இருந்தது. அதற்காக பல முயற்சிகளை செய்தேன். ஒரு விதத்திலும் பலன் கிடைக்கவில்லை. **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்து என் வேலைக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். சகோதரர் ஜெபித்து அனுப்பிய அந்த வருடத்திலேயே எனக்கு நிரந்தரமான அரசாங்க வேலை கிடைக்கும்படி சர்வவல்ல தேவன் அற்புதம் செய்தார். எனக்காக பாரத்துடன் ஜெபித்த சகோதரர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

**- Sis. துளசி ஜானி, ஐதராபாத்**

## சுகமளிக்கும் பரம வைத்தியர் இயேசு!



எனது மனைவி கமலாதேவிக்கு திடிரென்று பயங்கரமான மாரடைப்பு ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார். அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்பு கொண்டு ஜெபித்தோம். மிகவும் கரிசனையோடு மனதுருக்கத் துடன் ஜெப வீரர் ஜெபித்தார். அந்த நொடியே இதய வேதனை நீங்கியது. இப்பொழுது என் மனைவி பூரண நலமுடன் உள்ளார்கள்.

**- திரு. டானியேல் ஜம்ப்பா, விஜயவாடா**

## 9 வருட வேதனை அற்புதமாக சுகமானது



நான் 9 வருடமாக பயங்கரமான மைக்ரேன் (Migraine) என்னும் ஒருபக்க தலைவலியினால் கஷ்டப்பட்டேன். என்னால் வலி வந்தால் தாங்கவே முடியாது. இதன் நிமித்தமாக வெளிச்சத்தை காண முடியாதபடி இருட்டறைக்குள் போய் உட்கார்ந்து கொள்வேன். இந்நிலையில் நாங்கள் கம்மம் என்கிற இடத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் நடத்தின குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் கலந்து கொண்டோம். கடைசி நேரத்தில் தைரியமாக வந்து சகோதரனிடம் ஜெபித் தேன். அந்த நிமிடமே அவர் ஜெபித்தபடியே இயேசுவின் நாமத்தில் பொல்லாத மைக்ரேன் என்னைவிட்டு அகன்றது. இப்போது மூன்று வருடமாக மைக்ரேன் பிரச்சனை வரவே இல்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திரு. ராகுலு, கம்மம்**

## நான்கு வருடத்திற்கு பிறகு குழந்தை பாக்கியம்!

நான்கு வருடமாக குழந்தையின்றி தவித்தோம். விஜயவாடாவில் நடை பெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துகொண்டு **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் அவர்கள் ஜெபித்து கூறின தீர்க்கதரிசனத்தின்படியே அந்த வருடத்திலேயே அருமையான பெண் குழந்தையை பெற்றெடுக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். இப்பொழுது எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளது. கர்த்தருக்கே மகிமை! **- திருமதி .ரத்னா சேகர், கிருஷ்ணா மாவட்டம்**

## துக்கம் சந்தோஷமாக மாறியது

நானும், என் குழந்தைகளும் வெளியே சொல்ல முடியாத, தாங்க முடியாத கொடுமை யான வியாதியால் அதிக காலம் கஷ்டப்பட்டோம். அன்பரின் ஊழியத்திற்கு வாட்ஸ்அப் வாயிலாக தொடர்புக்கொண்டு ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். கர்த்தர் என்னையும், சுகவீனமாய் இருந்த என் இரண்டு குழந்தைகளையும் உடனடியாக சுகமாக்கினார். தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

**- Sis. பார்வதி, அனந்தபுரம்**

# பண்டித ரமாபாய் (1858 - 1922)



## பிறப்பும், குடும்ப சூழலும்

பெண்கள் உரிமைக்காக மட்டுமல்ல, கிறிஸ்துவுக்காகவும் உழைத்த ஒரு வீர பெண்மணியின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை சுருக்கமாக இங்கு காண்போம். பண்டித ரமாபாய் மகாராஷ்டிராவில் மேற்குப் பகுதியான குன்கமால் என்ற இடத்தில் 1858-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் நாள் பிறந்தார். அவரது பெற்றோர் அவருக்கு பிரகாசமுள்ளவர் என்ற அர்த்தம் கொண்ட ரமா என்ற பெயரை வைத்தனர்.

இவருடைய தாயார் இரவு நேரங்களில் கண்விழித்து புண்ணிய புராண இலக்கியங்களைப் படிப்பதில் அதிக ஆர்வம் உடையவர்கள். புராணங்களை வாசிப்பதில் இரண்டு நோக்கங்கள் இருக்கின்றன. முதலாவது பாவத்திலிருந்து விடுபடுவது, மோட்சத்தை அடையப் புண்ணியம் பெற்றுக்கொள்வதற்கும், இரண்டாவது பிறர் உதவி இல்லாமல் கௌரவமாக வாழ்வதற்குமாகும்.

இவருடைய பெற்றோர் இத்தகைய இலக்கியங்களை வாசிக்கிற வேலையைத் தவிர வேறு எந்த உலக காரியங்கள் எதுவுமே தெரியாதவர்களாய் வாழ்ந்து வந்தனர். குறிப்பாக எந்த வேலையும் செய்து பிழைக்கத் தெரியாத நிலையில் இவர்கள் நாட்கள் கடந்தது.

## கொடிய பஞ்சம்

சில நாட்கள் கழித்து சென்னைக்கு வந்து குடும்பமாய் தங்கினார்கள். அப்பொழுது சென்னை மாநிலம் முழுவதும் பஞ்சத்தின் பாதிப்பு அதிகமாய் உணரப்பட்டது. எல்லா இடங்களிலும் தண்ணீருக்கும், ஆகாரத்திற்கும் பற்றாக்குறை ஏற்பட்டது. எங்கு பார்த்தாலும் ஜனங்கள் பட்டினியால் பாதிக்கப் பட்டுக் கொண்டிருந்தார்கள். உணவுக்காக இவர்களும் அலைந்து திரிந்தார்கள். பசியைத் தவிர இவர்கள் கண்களுக்கு முன் எதுவும் இல்லை. இவருடைய தாய், தகப்பன், மூத்த சகோதரி ஒரு சில மாதங்களுக்குள் பசியினால் மரித்துப் போனார்கள். இறுதியில் ரமா, அவர்கள் சகோதரன் மட்டும் உயிரோடிருந்து, நல்ல ஆகாரமில்லாமல், நல்ல உடையில்லாமல் 4000 மைல்கள் கால்நடையாக பிரயாணம் செய்து, தருமசாலைச் சத்திரங்களில் தங்கி வாழ்ந்தார்கள். 1878-ம் ஆண்டில் தெற்கிலிருந்து காஷ்மீர் வரையிலும், மேற்கிலிருந்து கல்கத்தா வரையிலும் அலைந்து திரிந்துக் கொண்டிருந்தார்கள்.

## கிறிஸ்தவ மார்க்கத்திற்கு அறிமுகம்

கல்கத்தாவில் ஓர் ஆண்டு தங்கியிருந்த சமயம் இவர்களுக்கு அறிமுகமான நண்பர்கள் சிலர் கிறிஸ்தவ கூட்டத்திற்கு வரும்படி அழைத்திருந்தார்கள். இந்த புதிய அழைப்பை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயக்கம் காட்டினாலும், சென்று பார்ப்போம் என்ற எண்ணத்தில் கூட்டத்தில் கலந்துக்கொண்டனர். அங்கு எந்த உருவ வழிபாடும் இல்லாமல் முழங்காலில் நின்று ஒரு புத்தகத்தை வாசித்து ஜெபித்ததை கண்டார்கள். ஜெபம் முடிந்து கனிவு நிறைந்த அந்த கிறிஸ்தவர்கள் சமஸ்கிருத மொழியிலிருந்த ஒரு பரிசுத்த வேதாகமத்தை அவர்களுக்கு

கொடுத்தார்கள். அந்த வேதாகமத்தை வாசிக்க அவர்களுக்கு மனம் இல்லை. ஆனால் அன்றிலிருந்து அந்த வேதாகமத்தை விட்டு அவர்கள் பிரியவே இல்லை.

## திருமண வாழ்வு

1880-ம் ஆண்டு பிபின் பேஹாரி என்பவருடன் சிவில் நீதிமன்றத்தில் திருமணம் நடந்தது. பிபின் பேஹாரி பாப்டிஸ்ட் மிஷனெரியான ஐசக் ஆலன் அவரிடமிருந்து முறையாக கிறிஸ்தவ சித்தாத்தங்களை முதன் முறையாக கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். பிபின் பேஹாரி, ரமா இருவரும் இணைந்து குழந்தை பருவத்திலேயே விதவைகளாய்ப் போனவர்களுக்காக ஒரு பள்ளியை ஆரம்பிக்க வேண்டுமெனத் திட்டமிட்டனர். இந்த நேரத்தில் பிபின் பேஹாரி காலரா நோயின் காரணமாக மரித்துப் போனார். ரமாபாய் ஒரு சிறு மகளுடன் விதவை கோலத்தில் காணப்பட்டார். அந்நேரத்தில் இந்தியாவில் மட்டும் 22 இலட்சம் இளம் விதவைகளிருந்தனர். தான் ஒரு விதவையாயிருப்பினும், தன் சொந்த விடுதலையையும், கல்வியையும் குறித்துச் சிந்தித்துக் கொண்டார். அத்துடன் இந்தியாவிலுள்ள பெண்களுக்கு உதவி செய்யும்படி வாஞ்சையாயிருந்தார்.

## பெண்கள் உரிமை

வங்காளத்திலிருந்து பூனாவிற்குக் குடி பெயர்ந்தார். பூனாவிலிருந்த விதவைகளுக்கும், அநாதைகளுக்கும் மையங்களை நிறுவினார். பின்னர் பம்பாயில் பெண்களுக்கு அடிப்படையான கல்வியும், விற்பனை செய்யும் தொழில் திறமைக்கான பயிற்சியும் கொடுக்கப்பட்டன. விரைவில் ரமாபாய் இந்தியப் பெண்களின் உரிமைகள் மற்றும் நலன்களுக்காகக் குரல் கொடுக்கும் முன்னணி வழக்கறிஞரானார். இங்கிலாந்து சென்று மருத்துவம் பயின்று வந்து ஒரு மருத்துவராகத் இந்திய தேசத்துப் பெண்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று விரும்பினார்.

## கிறிஸ்தவ மார்க்கத்திற்கு ஈர்க்கப் படுதல்

1883-ம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் படிப்பிற்காக இங்கிலாந்துக்குச் சென்றார். இங்கிலாந்து சென்ற அவர் அங்கிருந்த கிறிஸ்தவ பெண்மணிகளின் பராமரிப்பில் வாழ்ந்து வந்தார். அங்கு இருந்த நாட்களில் கிறிஸ்தவ பெண் மணிகள் செய்து வந்த சேவைகள் ரமாபாயை மிகவும் கவர்ந்தது. சமுதாயத்தால் புறக்கணிக்கப் பட்ட பெண்களை வாழ்வில் உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் கிறிஸ்தவர்களுக்கு எப்படி வந்தது என்ற கேள்வியை ரமாபாய் அடிக்கடி கிறிஸ்தவ பெண்மணிகளிடம் கேட்பது வழக்கம். பாவிகள் மீது இயேசு கொண்டிருந்த அன்பையும், உண்மையான ஆராதனை எதுவென்பதையும் தாம் அறிந்துள்ளதால் இந்த பணியை செய்கிறோம் என மனத்தாழ்மையுடன் அந்த பெண்மணிகள் கூறினார்கள். இவ்விதமாக ரமாபாயின் இருதயம் கிறிஸ்துவின் பக்தி மார்க்கத்திற்கு நேராக ஈர்க்கப்பட்டது. 1883-ம் ஆண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்து சபையில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். அதன்பின் அவர்கள் வாழ்வில் மிகுந்த சந்தோஷத்துடன் காணப்பட்டார்கள். வேதாகமத்தை கிரமமாக வாசிக்க ஆரம்பித்தார்கள். சில பகுதிகளை வாசித்து தியானம் செய்தார்கள். அவருக்கு தேவை பக்திமார்க்கமல்ல, கிறிஸ்து மட்டுமே தேவை என்பதை உறுதியாக அறிந்துக் கொண்டார்கள்.

1905-ம் ஆண்டு ஆரம்பத்தில் ஒரு விசேஷித்த ஜெப வட்டாரத்தை ஆரம்பித்தார். ஒவ்வொரு நாள் காலையிலும் 70 பேர் கூடி, இந்திய கிறிஸ்தவர்கள் அனைவரும் உண்மையான மனமாற்றம் பெற, அனைத்து தேசத்து கிறிஸ்தவர்கள் மீதும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படவேண்டும் என ஜெபிக்க ஆரம்பித்தார். தொடர்ந்து ரமாபாய் கிறிஸ்துவின் அன்பை அயலாருக்கு எடுத்துச் சொன்னார். 1922ம் ஆண்டு தன் ஓட்டத்தை முடித்து அமைதலுடன் தேவனிடம் சரணடைந்தார்.

## மார்ச் மாத வேத வினா - விடை கேள்விகளுக்கான சரியான பதில்கள்

1. நகோமி, ரூத் (ரூத் 1:1, 22)
2. ஆபிரகாம், இஸ்மவேல் (ஆதி 21:20)
3. லேவியின் குடும்பத்தாரில் ஒருவன் அல்லது அம்ராம் மோசே (யாத் 2:1-10; யாத் 6:20)
4. இஸ்மவேல், நெபாயோத் (ஆதி 25:13-16)
5. சவுல், யோனத்தான் (2சாமு 1:17-23)
6. அகிமெலேக், அபியத்தார், (1சாமு 22:20-23)
7. கீஸ், சவுல் (1சாமு.9: 1-2)
8. நூன், யோசுவா. (யோசுவா 1:1)
9. சகரியா, யோவான்ஸ்நானன் (லூக்கா 1:13)
10. மொர்தெகாய், எஸ்தர், (எஸ்தர் 2:7)

## சரியான விடை எழுதி பரிசு பெறுபவர்கள்

1. சகோ. வில்சன் தர்மராஜ், தேனி
2. சகோ. ஜேக்கப் ஞானய்யா, கோயம்புத்தூர்
3. திருமதி. கிரேஸ் வல்லபாய், செங்கல்பட்டு
4. திருமதி. ஜேன் தர்மராஜ், திருநெல்வேலி
5. திருமதி. கிளாடிஸ் ஜெஸி, திருநெல்வேலி
6. சகோதரி. சந்திரா டேனியல், திருநெல்வேலி


திருச்சியில்

# குடும்ப ஆசீர்வாத ஜெபம்

நாள் : 2022 மே 28 சனிக்கிழமை

நேரம்
காலை 9.30 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 18

தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்

தொடர்புக்கு : (0431) 2765386, 94888 45627

# உடனடி தேவை

* Adobe Premiere Pro–வில் எடிட்டிங் செய்யத்தெரிந்த Video Editors.
* வேதாகமம் தெரிந்த, பட்டப்படிப்பு முடித்த ஆங்கிலம் & தமிழ் தட்டச்சு பயின்றவர்கள்.
* பட்டப்படிப்பு முடித்த கம்ப்யூட்டர் நன்கு தெரிந்த Data Entry Operators
* அனுபவமுள்ள ஓட்டுனர்கள் (SUV)
* சமையல் செய்பவர்கள்
* தூய்மைப் பணியாளர் (பெண்கள் மட்டும்)

கிறிஸ்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

JOB VACANCY

தகுந்த ஊதியம் வழங்கப்படும்

Apply to: info@mojindia.org

நேரிலோ அல்லது E.Mail மூலமாகவோ உங்களுடைய Resume & Certificate Copy – ஐ அனுப்பி வைக்கவும்

அன்பு பங்காளரராகிய உங்களுடைய பிள்ளைகள் தேர்வு எழுதிக் கொண்டிருக்கும் இந்த நாட்களில், கர்த்தர் தேவையான ஞானத்தை, அவர்களுக்கு அருளுவார். விசேஷமாய் வேத வசனத்தைக் கொண்டு ஜெபித்து, தேர்வுக்கு செல்ல மே மாதத்தின் 31 நாள்களுக்கும், 31 வசனங்களைக் கீழே கொடுத்துள்ளோம்.



| | |
|---|---|
| மே 01 | கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும். - நீதி. 2:6 |
| மே 02 | கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; - நீதி. 1:7 |
| மே 03 | சகல கிழக்கித்திப் புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்தது. - 1இராஜா. 4:30 |
| மே 04 | புத்திமானுடைய உதடுகளில் விளங்குவது ஞானம்; - நீதி. 10:13 |
| மே 05 | அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. - கொலோ. 2:3 |
| மே 06 | கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி, புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார். - நீதி. 3:19 |
| மே 07 | தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு. - நீதி. 11:2 |
| மே 08 | ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! - ரோமர் 11:33 |
| மே 09 | ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு. - நீதி. 13:10 |
| மே 10 | பெலத்தைப் பார்க்கிலும் ஞானமே உத்தமம். - பிர. 9:16 |
| மே 11 | முத்துக்களைப் பார்க்கிலும் ஞானத்தின் விலை உயர்ந்தது. - யோபு 28:8 |
| மே 12 | புத்திமானுக்கோ ஞானம் உண்டு. - நீதி. 10:23 |
| மே 13 | சகலவித வேலைகளையும் செய்யும்படிக்கு அவர்களுடைய இருதயத்தை ஞானத்தினால் நிரப்பினார். - யாத்தி. 35:35 |
| மே 14 | மனுஷனுடைய ஞானம் அவன் முகத்தைப் பிரகாசிக்கப் பண்ணும். - பிரசங்கி 8:1 |
| மே 15 | … ஞானவான் போதிக்கப்படும்போது அறிவடைவான். - நீதி. 21:11 |

| | |
|---|---|
| மே 16 | நகரத்திலுள்ள பத்து, அதிபதிகளைப் பார்க்கிலும், ஞானம் ஞானியை அதிக பெலவானாக்கும். - பிரசங்கி 7:19 |
| மே 17 | நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளிய ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள். - 1இராஜா. 3:28 |
| மே 18 | அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்து வைத்திருக்கிறார்; - நீதி. 2:7 |
| மே 19 | பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது. - லூக்கா 2:40 |
| மே 20 | உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன். - சங். 119:100 |
| மே 21 | ஞானமுள்ளவன் உம்முடைய நாமத்தை மதிப்பான். - மீகா 6:9 |
| மே 22 | உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். - யாக். 1:5 |
| மே 23 | ஞானம் கேடகம், திரவியமும் கேடகம்; ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனைத் தரும்; இதுவே அறிவின் மேன்மை. - பிரசங்கி 7:12 |
| மே 24 | பொன்னைச் சம்பாதிப்பதிலும் ஞானத்தைச் சம்பாதிப்பது எவ்வளவு உத்தமம்! வெள்ளியைச் சம்பாதிப்பதிலும் புத்தியைச் சம்பாதிப்பது எவ்வளவு மேன்மை! - நீதி. 16:16 |
| மே 25 | நன்மை தீமை இன்னதெனறு வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும். - 1இராஜா. 3:9 |
| மே 26 | கர்த்தருடைய கண்கள் ஞானத்தைக் காக்கும். - நீதி. 22:12 |
| மே 27 | மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்த படியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான். - உபா. 34:9 |
| மே 28 | கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக. - கொலே. 3:16 |
| மே 29 | கர்த்தர் ஞானமுள்ள தேவன்; - 1 சாமு. 2:3 |
| மே 30 | உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன். - 1இராஜா 3:12 |
| மே 31 | ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்து கொள்வார்கள். - சங். 107:43 |

# அப்போஸ்தல தீர்க்கதரிசன பயிற்சி முகாம் ஒரு பார்வை!

**தேவ சித்தப்படி பிப்ரவரி மாதம் 26,27 தேதிகளில் சென்னையில் உள்ள Praise Tower- ல் அப்போஸ்தல தீர்க்கதரிசன பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த முகாமை Rev. Dr. ஜார்ஜ் ராபர்ட், Ph.D., Senior Pastor, அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார்கள். அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவிக்கிறோம்.**





## ☞ இந்த முகாமை குறித்து அவருடைய அனுபவ பகிர்வுகள் சில...

- இந்த இரண்டு நாள் முகாமிற்கு 800 பேர் உற்சாகமாய் வந்து பங்கு பெற்றனர். காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெற்றது.
- **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் சத்தியத்தில் உள்ள ஆழமான இரகசியங்கள் பலவற்றை நாங்கள் புரிந்துக்கொள்ளும் வகையில் எளிய நடையில் எங்களுக்கு போதித்தார்.
- விசேஷமாக தேவாதி தேவனின் மகிமை நிறைந்த பரலோகம் மற்றும் நரகம், பாதாளம் இவற்றைக் குறித்து விளக்கமாக, இதுவரை நாங்கள் கேட்டிராத பல காரியங்களை கூறி எங்களை ஆச்சரியப் படுத்தினார்கள்.
- கிறிஸ்துவுக்குள் புது வாழ்வு வாழ, சபையில் அனல் கொண்டு செயல்பட, ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர எங்களை உற்சாகப்படுத்தினார்கள்.
- பரிசுத்த ஆவியானவரின் அக்கினி அபிஷேகத்தைப் பெற்று, ஊழியத்தில் எப்படி வல்லமையாக செயல்படுவது என்பது பற்றியும் விளக்கமாக கற்றுக்கொண்டோம்.
- **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய அனுபவங்கள், ஆண்டவரோடு நெருங்கி ஜீவிப்பது எப்படி என்பதைக்குறித்தும் அறிந்துக்கொண்டோம்.
- ஊழியத்தை எப்படி உண்மையான ஆத்தும பாரத்துடன் செய்து கர்த்தரை மகிமைப்படுத்துவது என புரியும்படி சொன்னார்கள்.
- **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களுக்கு கர்த்தர் கொடுத்த பல வெளிப்பாடுகளையும், குறிப்பாக அவருடைய மரண அனுபவங்களையும் எங்களோடு பகிர்ந்துக்கொண்டார்.
- இந்த இரண்டு நாள் முகாம் அதிக பயனுள்ளதாக இருந்தது. அதற்காக கர்த்தரை துதிக்கிறோம். **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

**Rev. Dr. ஜார்ஜ் ராபர்ட், Ph.D.,**
**Senior Pastor, Chennai.**



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

- ✦ பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார்; அவர் திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார்; – சங்கீதம் 146:9
- ✦ தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார் – சங்கீதம் 68:5
- ✦ திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது – யாக்கோபு 1:27

எனக்கு மிகவும் அருமையான S J Saves Trust-ன் உதவியாளர்களே, நன்கொடையாளர்களே உங்களுக்கு என் உளமார்ந்த நன்றியையும், வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவனுடைய அளவற்ற அன்பினாலும், அவருடைய சுத்த கிருபையினாலும் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக நாம் S J Saves Trust-மூலமாக ஏழை எளிய மக்களுக்கும், ஏழை மாணவ, மாணவியர்களுக்கும் பல உதவிகளை செய்து வருகிறோம்.

- **நம்மிடம் உதவி பெறுகிற மக்கள் அனைவரும் தமிழ்நாட்டில் உள்ள குக்கிராமங்களில் வாழ்கின்றவர்களே**
- **இவர்களுக்கு அதிகமான வசதி வாய்ப்புகள் எதுவும் இல்லை. அனைத்து நிலையிலும் தள்ளப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, கைவிடப்பட்ட, வசதியற்ற பிள்ளைகளுக்கு அவர்கள் இருக்கின்ற இடத்தைத் தேடிச் சென்றே உதவிகள் செய்து வருகிறோம்.**
- **வாழ்க்கையில் பல்வேறு துன்பத்தையும், பசி, பட்டினியையும் அனுபவிக்கிற ஏழை பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் மற்றும் தீராத வியாதி உடையவர்களுக்கும் உதவி செய்து வரும் இந்த மாபெரும் பணியில் நீங்களும் எங்களோடு சேர்ந்து இந்த உதவிகளை செய்வதற்காக தேவனை துதிக்கின்றேன்.**
- **சோர்ந்து போகாமல் தொடர்ந்து இந்த நன்மையான காரியங்களை செய்வோம். "உன்னைப் போல பிறனையும் நேசி" என்ற அருள்நாதரின் வாக்கின்படி நாம் இப்படிப் பட்டவர்களை நேசிக்கும்பொழுது மகா இரக்கமுள்ள தேவனை நேசிக்கிறோம் என்பதை உலகிற்கு வெளிப்படுத்துகிறோம்.**

இந்த அறப்பணியில் ஜாதி, இன, தகுதி வித்தியாசமின்றி தேவைப்படும் எல்லா ஏழைகளுக்கும் உங்கள் தாராளஉதவியுடன் நன்மைகள் செய்து வருகிறோம். மார்ச் மாதம் எனது பிறந்த நாளை முன்னிட்டு கிராமப்புற ஏழை விதவைகள் 200 பேருக்கு புடவைகள், போர்வை, டிபன் பாக்ஸ், நல்லதொரு விட்டமின் டானிக், புரோட்டின் பவுடர், அறுசுவை உணவு, இனிப்பு மற்றும் கார வகைகள் கொடுக்கப் பட்டது. சீப்பு, சோப், தேங்காய் எண்ணெய் போன்ற அடிப்படை தேவைக்குரிய பொருட்களும் வழங்கினோம். இதற்காக மிகவும் உதவி செய்த திரு.ஆனந்த தேவநேசன், அவரது

துணைவியார் திருமதி. எப்சிபா மற்றும் திருமதி. விசுவாசி மற்றும் SJ Saves Trust-க்கு கடந்த மாதம் உதவின அனைவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கின்றோம்.

நம்மிடம் உதவி பெறுகின்ற அநேக தாய்மார்கள் கணவரை இழந்தவர்கள். அவர்களுடைய கணவர்மார் சிறுநீரகக் கோளாறால், கொடிய கேன்ஸர், பயங்கர விபத்துக்களினால், கல்லீரல் பாதிப்புகளினால் மற்றும் வாழ்க்கையில் முன்னேற முடியாமல் மனச்சோர்வு ஏற்பட்டு தற்கொலை செய்து இறந்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட கஷ்டத்தோடு வாழும் கைம்பெண்களுக்கு, அவர்களது நல்வாழ்க்கைக்கு எவரும் உதவ முன் வரமாட்டார்கள். இவர்கள் அப்படியே தனித்து குடிசையில் வாழ்கிறார்கள். இதில் பலர் ஈரத் தரையில் வெறுமனே படுப்பதால் முடக்குவாதம், (Rheumatoid Arthritis) மற்றும் பலவியாதிகளால் துன்பப்படுகிறார்கள். முடிந்தால் வேலைக்கு போகிறார்கள். இல்லையென்றால் அப்படியே வீட்டில் சுருண்டு படுத்து விடுகிறார்கள். ஆதரவற்ற மக்களாக இருக்கிறார்கள். அநேக வயதான விதவைகளால் சமைக்கக் கூட முடியாத அளவில் முதுமையில் உள்ளார்கள். எனவே இப்படிப் பட்டவர்களை நாம் சகல விதங்களிலும் ஆதரிப்போம்.

**இந்த அறப்பணிகளின் மூலமாக இன்னும் ஆயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் பயன்பெற ஜெபியுங்கள், உதவிக் கரம் நீட்டுங்கள்.**

கிராமப்புற மருத்துவமனைக்காகவும் ஜெபியுங்கள். உங்களால் இயன்ற உதவியை செய்யுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். மருத்துவமனையில் சில முக்கியமான பணிகளை செய்ய வேண்டியுள்ளது. குறிப்பாக மதில் சுவர் முழுவதும் சுண்ணாம்பு அடிக்கவேண்டும்.

அங்குள்ள மரம், செடி, கொடிகளை பத்திரமாக பாதுகாத்து பேண ஒரு நல்ல கிறிஸ்தவ குடும்பத்தினர் தேவை. அதோடு கர்த்தருக்காக தியாக உள்ளத்தோடு பணி புரிய நல்ல ஒரு M.B.B.S. மருத்துவர் தேவை. உங்களுக்கு தெரிந்தவர்கள் இருந்தால் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். கர்த்தர் தாமே உங்களைஆசீர்வதிப்பாராக.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org

**Telugu Whats App No: 91770 87860**

**சேலம் மாவட்டம் மின்னம் பாளையம், செல்லியம் பாளையம்,
M. பெருமாள் பாளையம், கிராமத்தில் வசிக்கும் ஏழை விதவைகள்
200 பேருக்கு புடவைகள், போர்வை, டிபன் பாக்ஸ், நல்லதொரு
விட்டமின் டானிக், புரோட்டின் பவுடர் போன்றவைகள் வழங்கப்பட்டது.**














# அன்பு பங்காளர் வாழ்வில் கர்த்தர் செய்த அதிசய செயல் இது!

**மரணத்திலிருந்து விடுவித்து புது ஜீவனைத் தந்த அற்புத தேவன்!**
**ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு. (சங். 68:20)**

என் அம்மா பெயர் மனோரா, சாவீக்கல் (Cervical cancer) கேன்சர் வியாதியினால் மரணவேதனையை அனுபவித்தார்கள். நிச்சயம் இறந்து விடுவார்கள் என மருத்துவர்கள் சொல்லி விட்டனர். அதனால் நான் சோர்ந்துப்போய் மேற்கொண்டு என்ன செய்வது என தெரியாமல் திகைத்து நின்றேன். அந்த இக்கட்டான நேரத்தில் நான் வாட்ஸ் அப் வாயிலாக சகோதரர் அவர்களை தொடர்புக்கொண்டு என் அம்மாவிற்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அப்பொழுது **சகோதரர் ஆனந்த ஸ்திரா** அவர்கள் என் அம்மாவிற்காக உருக்கமாக ஜெபித்து, வாக்குத்தத்த வசனங்களை அனுப்பி எங்களை ஆறுதல்படுத்தினார்கள். அந்த வாக்குத்தத்த வசனங்களை நாங்கள் உறுதியாக பிடித்துக் கொண்டோம்.

**கர்த்தர் சகோதரரின் ஜெபத்தைக் கேட்டார். மரணத்திற்கு நேராக சென்றுக் கொண்டிருந்த என் அம்மாவிற்கு கர்த்தர் புது ஜீவனைக் கொடுத்தார். இது எங்கள் வாழ்வில் நேரில் நாங்கள் கண்ட கர்த்தரின் மகத்தானஅற்புத செயல். அதற்காக கர்த்தரை மனதார துதிக்கிறோம்.**

சகோதரர் அவர்கள் S.J.Saves Trust மூலமாக ஏராளமான பிள்ளைகளுக்கு, விதவை களுக்கு, வயதானவர்களுக்கு, புத்தாடைகள், உணவுப் பொருட்கள், மருந்துகள் கொடுத்து உதவி செய்து வருவதை டி.வி. நிகழ்ச்சி வாயிலாக அறிந்தோம். இந்த பணிக்கு எங்கள் குடும்பத்தின் சார்பாக Rs.50,000/- கொடுத்து கர்த்தரை மகிமைப்படுத்துகிறோம்.

- Bro. **ஸ்வப்ணபாபு, விஜயவாடா**


## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

ARADANA TV
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST TV
சனி இரவு 07.30 – 08.00

**Tamil Whats App No: 95004 87059**

# உங்கள் குழந்தைகளுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான ஒரு சில குறிப்புகள்!

### 1. இரகசிய குறிப்பு

உங்கள் குழந்தைக்கும், உங்களுக்கும் இடையே ஒரு இரகசிய **code** (குறிப்பு) வைத்துக்கொள்ள வேண்டும். (பெயர் அல்லது எண்களில்). முன்பின் தெரியாத நபர்கள் குழந்தைகளை அழைக்கும்பொழுது **code**-ஐ சொல்லாவிட்டால் அவர்கள் திருடர்கள் என்று பிள்ளைகள் அறிந்து கொள்ள முடியும்.



### 2. சத்தமாக சொல்தல்

பஸ், ரயில் பயணத்தில் அல்லது சுற்றுலா இடங்களில் குழந்தைகள் தவறினால் உடனே தனியாக இருக்கும் எந்த நபரிடமும் உதவி கேட்க கூடாது. தாய் தந்தை,வயதானவர்கள் மற்றும் பிள்ளைகளுடன் இருப்பவர்களிடம் சென்று தான் பெற்றோரை தவற விட்ட விஷயத்தை சத்தமாக சொல்ல வேண்டும்.

### 3. நண்பரைப் போல பழகுதல்

பிள்ளைகள் பள்ளி முடிந்து வந்தவுடன் அவர்கள் காரியங்களை பொறுமையாய் கேட்டு அறிந்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக இன்று நான் அடி வாங்கினேன் என கூறினால், வீட்டில் அடங்காத உன்னை பள்ளியில் அடக்கினார்களா என்று மனது புண்படும்படி பேசக்கூடாது. நண்பர்களை போல பழகினால் அவர்கள் அனைத்தையும் உங்களிடம் சொல்லும் பழக்கத்திற்கு வந்துவிடுவார்கள். பிறகு நீங்கள் சரியான ஆலோசனையை வழங்க வேண்டும்.





### 4. கற்றுத் தருதல்

பிள்ளைகள் எதிர்காலத்தில் மேல்படிப்பு, வேலை வாய்ப்பு காரியங்கள் மற்றும் பொருளாதார ரீதியாக எத்தகைய பிரச்சனைகளை சந்திக்க நேரிடும் என்பதை கற்றுத்தர வேண்டும்.

### 5. நல்ல உரையாடல்

பெற்றோர் மற்றும் பிள்ளைகள் இடையே நல்ல உறவு, நல்ல உரையாடல் தினந்தோறும் இடம் பெற வேண்டும்.

### 6. தொடர் கண்காணிப்பு

உங்கள் பிள்ளைகள் தகவல் தொடர்பு சாதனங்களை பயன்படுத்தும்பொழுது கண்காணிக்க வேண்டும்.
**(Cell phone, TV, I Pad)**
பிள்ளைகள் எந்த நண்பருடைய வீட்டிற்கும் தனியாக செல்ல அனுமதிக்கக் கூடாது. அங்கு சரியான பாதுகாப்பு இருக்கிறதா என்பதை உறுதி செய்தல் அவசியம்.

### 7. முன்மாதிரியான வாழ்க்கை

உங்கள் பிள்ளைகள் கேட்டு அறிவதைவிட பார்த்தே அதிகமாக கற்றுக்கொள்கிறார்கள். ஆகவே நீங்கள் எல்லாவற்றிலும் முன்மாதிரியாக இருக்க வேண்டும். கெட்ட வார்த்தைகள் பேசக்கூடாது. தவறானதை பார்க்க கூடாது.பிள்ளைகள் முன் சண்டை போடக்கூடாது.

## உங்கள் பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர தேவையான 7 குறிப்புகள்!

1. பெற்றோராகிய நீங்கள் ஆவிக்குரிய வாழ்வில் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.(யோவான் 13:15)
2. திருச்சபையில், ஊழியங்களில் பிள்ளைகள் ஆவலுடன் அனைத்திலும் பங்கு பெற ஊக்குவிக்க வேண்டும்.
3. தினந்தோறும் வேதத்தை படிக்க, ஜெபிக்க வைக்க வேண்டும். (எபே.6:17)
4. கிறிஸ்தவ வாழ்விற்கு ஜெபமே ஜீவன்,ஜெபமே அஸ்திரபாரம் என்பதை உணர்த்த வேண்டும். (ரோமர் 12:12)
5. பல மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு, பரிசுத்தவான்கள் மற்றும் இரத்த சாட்சிகளாய் மரித்தவர்கள் பற்றிய உண்மை சம்பவங்களை மற்றும் உங்கள் வாழ்க்கையில் கர்த்தர் செய்த அதிசயங்களை அடிக்கடி சொல்லி கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும்.
6. கர்த்தருக்கு பயப்படும் பயம் எப்பொழுதும் பிள்ளைகளின் கண்கள் முன்பாக இருக்க வேண்டும்.(யாத்தி.23:27)
7. கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ சபைகள் எதிர்காலத்தில் எத்தகைய சவால்களை சந்திக்க இருக்கிறோம் என்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.